# இஸ்லாம் இந்து மதத்திற்கு விரோதமானதா?

TNSDA
08437

கலைமாமணி கவி கா.மு. ஷரீப்

சீதக்காதி நூல் வெளியீட்டகம்
சென்னை - 600 002.

# இஸ்லாம் இந்து மதத்திற்கு விரோதமானதா?

கலைமாமணி
கவி கா.மு.ஷெரீப்

சீதக்காதி நூல் வெளியீட்டகம்
21, பச்சையப்ப செட்டி தெரு,
சென்னை-600 002.

முதற் பதிப்பு: பிப்ரவரி 1985
பக்கங்கள்: viii + 64 = 72

உரிமை பதிவு செய்யப்பட்டது.

297
தெல

விலை : ரூ. 5-00

அரசு தொல் பொருள் ஆய்வுத் துறை நூலகம் - சென்னை
எண் 8437
தேதி 22/9/87

அச்சிட்டோர் :
மில்லத் பிரிண்டர்ஸ்
16, அப்புமேஸ்திரி தெரு,
சென்னை-600 001.

00366

# அணிந்துரை

பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்
நஹ்மது ஹூ வ நுஸல்லீ அலாரஸூலிஹில் கரீம்

"அல்லாஹ் அல்லாத எவற்றைப் (பிற மனிதர்கள் ஆண்டவர்களென) அழைக்கின்றார்களோ அவற்றை நீங்கள் திட்டாதீர்கள்............(6 : 108)

"......மனிதர்களில் சிலரைக் கொண்டு சிலரை அல்லாஹ் தடுக்காதிருப்பின் ஆசிரமங்களும், கிறிஸ்தவர்கள் வணங்குந்தலங்களும், யூதர்களின் ஆலயங்களும், அல்லாஹ்வின் திருநாமம் அதிகமதிகம் தியானிக்கப் பெறும் மஸ்ஜிதுகளும் அழிக்கப்பட்டுப் போயிருக்கும்......(22 : 40)

★ ★ ★

நாடறிந்த நாவலரும், நல்ல தமிழ்க் காவலரும், சீருவின் செப்பரிய விரிவுரையாளரும், பன்னூலாசிரியரும், ஆய்வாளருமான கலைமாமணி, "இஸ்லாம் இந்து மதத்திற்கு விரோதமானதா?" என்னும், அளவில் சிறிதும், ஆழிய, கருத்தோட்டத்தில் மிக விசாலமானதுமான ஓர் அரிய நூலை யாத்துத் தந்துள்ளார்கள். இந்நூலைக் காய்தல் உவத்தலின்றி சிந்தித்துப் படிக்கும் நேர்மையுள்ளம் கொண்ட எவரும், இஸ்லாம் இந்து மதத்துக்கு மட்டுமின்றி, வேறு எந்த மதத்துக்கும்—ஏன் நாத்திகத்துக்கும் கூட— அவற்றை வன்முறையாலோ, அடாத செயல்களாலோ அழிக்க முற்படும் விரோதியல்ல என்பதை உணர்வர்.

உலகப் படைப்புகள் அனைத்தையும்—மக்கள் அவர்கள் எச்சமயத்தைச் சார்ந்தோராயினும், அவர்கள் எம்மொழியைப் பேசினுலும், எந்நாட்டவராலுைம், என்ன நிறத்தவராலுைம், எந்த இனத்தவராயினும் அவர்கள் அனைவரையும் படைத்துக் காப்பவன் ஏக இறைவனன அல்லாஹ்தான் என்பது இஸ்லாத்தின் அடிப்படைத் தத்துவமும், போதனையுமாகும். தித்திக்கும் திருமறையின் முதல் திருவசனமே இவ்வுண்மையை உலகறிய உரைக்கிறது;

அனைத்துப் புகழும், அகிலங்கள் எல்லாவற்றையும் படைத்து, வளர்த்துப் பரிபக்குவப்படுத்தும் (நாயனன) அல்லாஹ்வுக்கே யாகும். (திருக்குர்ஆன் அத்தியாயம் 1, திரு வசனம். 1)

ஆக, மனிதர்கள் அனைவரையும்—அவர்கள் இந்துக்களாயினும், கிறித்தவர்களாயினும், சமணர்களாயினும், நாத்திகர்களாயினும்—படைத்தவன் ஒரே இறைவன்தான். அவ்வாறு இருக்கும்போது அறச் சமயம் ஒன்று பிறரிடம் விரோதம் பாராட்டச் சொல்லாது; சொல்லக்கூடாது. இதைத்தான் இன்னிசைக் கவிஞர் அல்லாமா முஹம்மது இக்பால் (ரஹ்) ஆணித்தரமாக: ''மஸ்ஹப் நஹீ(ன்) ஸிக்காதா ஆபஸ் மே பைர் ரக்ன—ஒருவருக்கொருவர் விரோதம் பாராட்டிக் கொள்ளவும், பகைவராகவும் இருக்கவும் மதம் போதிப்பதில்லை—அதாவது இஸ்லாம் அவ்வாறு விரோதம் கொள்வதை ஏற்பதில்லை,'' என்று கருத்துச் செறிய ஒரு கவிதையில் கூறுகிறார்.

மேலும் அவர் கூறுகிறார்: நாத்திகர்களையும் விரோதங் கொண்டு செயல்படாதீர்கள். ஏனெனில் ''லா இலாஹ இல்லல்லாஹ்—''இறைவன் இல்லை—ஏக இறைவனை அல்லாஹ்வைத் தவிர'' என்ற திருமந்திரத்தின் முதற் பகுதியை அவர்கள் இப்பொழுது ஓத ஆரம்பித்திருக்கிறார்கள்!'' என்று கூறுகிறார். அவர்கள் பிற்பகுதியையும் ஓதி, உணர்ந்து செயல்படுவது, அத்திருமந்திரத்தை ஏற்கெனவே ஓதி வருவோரின் நடத்தையைப் பொறுத்தது என்பதை உணர்த்தும் வகையில் இவ்வாறு கூறுகின்றார்.

அல் குர் ஆனின் திருவசனங்கள் இரண்டை மேலே படித்தீர்கள். ''பிறர் வணங்கும் தெய்வங்களைப் பழிக்காதீர்கள்,'' ''அவர்களின் வணக்கத் தலங்களை, அவற்றை அழிக்க முற்படுவோரிடமிருந்து, அல்லாஹ்வே தடுத்துக் காக்கிறான்,'' என்ற அறிவுரைகளை இத் திருவசனங்களில் அல்லாஹு தஆலா வழங்குகிறான்

''அண்டை வீட்டுக்காரன் பசித்திருக்க தான் மட்டும் வயிறார உண்பவன், என்னைச் சார்ந்தவன் அல்லன்,'' என்று பெருமானார் (ஸல்) அவர்கள் கூறியபோது ''அண்டை வீட்டார் யாராக இருந்தாலுமா?'' என்று அன்னை ஆயிஷா நாச்சியார் வினவினார்கள். ''யூதராக இருந்தாலும் சரியே!'' என்று இறைவனின் திருத்தூதர் பதிலளித்தார்கள்.

''உங்களிடம் விருந்தினர் வந்தால் அவர்களை உளமார உபசரித்து ஆவன செய்யுங்கள்—அவர்கள் காபிர்களாக இருந்தாலும் சரியே!'' என்றும் உத்தமத் திருநபி உரைத்துள்ளார்கள்.

இவ்வாறு பிறரைப் பகைக்கவோ, அவர்களுக்கு உதவிடாது இருக்கவோ இஸ்லாம் போதிக்கவில்லை என்று அல் குர்ஆனும், அற நூல்களும், அழகிய வரலாறுகளும் இன்றும்—என்றும் சான்று கூற இருக்கும்போது, முஸ்லிம்கள் கொடுமையாளர்கள், ஊரை அழித்தார்கள், கோவிலை இடித்தார்கள் என்ற கட்டுக் கதைகள் எப்பொழுது கற்பனை செய்யப் பெற்றுச் செலாவணியில் விடப்பட்டன என்பதை ஆய்ந்துணர்த்துவதையே தம் பணியாகக் கொண்டு, இந் நூலைத் தந்துள்ளனார்கள் ஆசிரியப் பெருமகனுர்.

இந்து முஸ்லிம் ஒற்றுமையைக் கண்ட வெள்ளையன் இந்த ஒற்றுமை சிதைந்தால் ஒழிய இந்த நாட்டினை நாம் ஆளமுடியாது என உணர்ந்தான். இந்து முஸ்லிம்களிடையே பகைப்பு எண்ணம் வளர்ந்திடும் வகையில் வரலாற்றினை எழுதிடலானுன். இன்று நம்மிடையே உள்ள நம் வரலாறுகளெல்லாம் வெள்ளையன் எழுதியவை அல்லது அவற்றை ஆதாரமாகக் கொண்டு எழுதப்பட்டவை தானே! இன்று வெள்ளையன் போய்விட்டான். ஆனுலும் அவன் வைத்த தீ—இந்து முஸ்லிம் பகை நெருப்பு—அணையவில்லை....'' (பக் : 25) என்று ஆசிரியர் கூறுவது மிகைச் சொல்லுமல்ல. கற்பனையுமல்ல; தக்க வரலாற்று ஆதாரங்களைக் கொண்ட பேருண்மையாகும்.

இங்கிலாந்தின் முதலாம் எலிஸபெத் அரசி கிழக்கிந்தியக் கம்பெனி ஒன்று நிறுவுவதற்குரிய சாசனம் வழங்கினுர். இக் கம்பெனியைச் சார்ந்தோரையே ''கும்பினியார்'' என்று தமிழக வரலாறும் கூறுகிறது. கி. பி. 1600-ம் ஆண்டு இவ்வாறு தோன்றிய கிழக்கிந்திய கம்பெனியார் 1613-ம் ஆண்டில் ஸூரத்தில் ஒரு தொழிற்சாலையை நிறுவினர். 1662-ம் வருடத்தில் பம்பாயைத் தம் ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வந்தனர். பிரெஞ்சு ஆளுநரான டூப்ளே, ஆங்கிலேயரின் செல்வாக்கை அழிக்க முயன்றுர். ஆனுல் கிளைவ் அச்செல்வாக்கை வேரூன்றச் செய்வதில் வெற்றி கண்டார். பிட் பிரிட்டிஷ் பிரதமரான போது, ஒரு தனிச்சட்டமியற்றி கம்பெனியின் நிர்வாகத்தை மேற்பார்க்க அமைப்பொன்றை 1784 ம் ஆண்டு நிறுவினுர். ஆனுல் 1857 ம் ஆண்டு கிளர்ந்தெழுந்த தேசீயப் போராட்டத்தின் விளைவாக கம்பெனி ஆதிக்கத்தை அகற்றி, பிரிட்டிஷ் அரசே இந்தியாவை நேரடியாக நிர்வகிக்கத் தொடங்கிற்று.

நம் ஏகபோக ஆட்சிக்கு பாதகம் ஏற்படாதிருக்க வேண்டுமானுல், இந்துக்களும், முஸ்லிம்களும் ஒருவரோடொருவர்

நேசபாவத்தோடு இருக்கக்கூடாது என ஆங்கில அரசு எண்ணிற்று. அதற்கு என்ன செய்யலாம்?

தொன்மையான ஒரு நூல் என்னிடம் இருக்கின்றது. ''இந்தியாவின் ஆட்சி'' என்னும் அந்த நூல் 1833 ம் ஆண்டு—அதாவது பிரிட்டிஷ் அரசு இந்தியாவின் நேரடி நிர்வாகத்தைக் கைபற்றுவதற்கு 25 ஆண்டுகளுக்கு முன்னர்—கம்பெனியாரின் செயலாளரான ஸர் ஜான் மால்கம் என்பவரால் எழுதப்பெற்றது. அந்த நூலில் அவர் குறிப்பிடுகிறார்: ''THA EMPIRE HAS BEEN ACQUIRED, AND MUST BE MAINTAINED, BY THE SWORD" [இந்த (இந்தியப்) பேரரசு வாளாலே அடையப்பெற்றது, அது வாளாலேயே நிர்வகிக்கப்படும்,'' அனுபந்தம் E, பக்கம் 187]

ஆனால் வாளின் சாகசம் வளர்ந்தெழுந்த—இந்து—முஸ்லிம் இணைந்து பெற்றிருந்த—தேசீய உணர்வை அழிக்க ஆற்றல் பெருது போயிற்று. 1806 ம் ஆண்டில், முதல் தேசீய விடுதலைப் போர் வேலூரில் வெடித்தது. வேலூர்க் கோட்டையில் யூனியன் ஜாக் கொடியை இறக்கிவிட்டு, ஷஹீது திப்பு சுல்தான் வீர மரணத்தைத் தழுவும்போதும் வெற்றிச் சின்னமாக வைத்திருந்ததும், ''அல்-ஃபத்தாஹ்''—இறைவனே வெற்றியாளன்—என்னும் இறைவனின் திருநாமத்தைப் பொறித்திருந்ததுமான விடுதலைக் கொடியை ஏற்றினர் இந்து—முஸ்லிம் தேசீய வீரர்கள். பட்டொளி வீசிப் பறந்த அப்பதாகை பரங்கியரைப் பதைபதைக்கச் செய்தது!

அடுத்து, ஐம்பதாண்டுகளுக்குப் பின் 1857 ம் ஆண்டில் கொதித்தெழுந்த தேசீயப் போரின் போது, மன்னர் பஹாதுர்ஷாஜஃபரையே தங்கள் தலைவராக இருக்குமாறு வேண்டிக்கொண்டார்கள் இந்து-முஸ்லிம் பெருங்குடி மக்கள். ஆக, வாள் இந்து முஸ்லிம்களைப் பிரிக்காது என்று கண்டு கொண்ட வன்கணாளர்கள், பேனாவைத் தூக்கினர்.

அதன் விளைவாகத்தான் இரத்தக் கறையை மறந்து, சோகக் கறையை, நச்சுக் கறையைத் தோய்க்கும் வரலாறுகளை எழுதத் துவங்கினர் வெள்ளையரும், அவர்தம் கூலிப் படையினரும்! அவர்கள் எழுத்துகளில் உண்மைக்கே தரித்திரமேற்பட்டுப் போனமையினால் அவர்களைச் சரித்திராசிரியர்கள் என்று சொல்வதைவிட தரித்திராசிரியர்கள் என்றே சொல்ல வேண்டும்.

ஆனால் ''பொய்யைத் தொழுதடிமை செய்து'' சரித்திரத்தைப் புரட்டிய இப்புன்மதியாளரின் சூழ்ச்சி என்றும்

நிலேத்திருக்கக் கூடியதல்ல. இஸ்லாத்துக்கு வாளும் தேவை யல்ல, வன்முறையும் தேவையல்ல!

''இஸ்லாம் இந்த உலகில் பரவி வருகிறது. எளிமை யான முறையில் அது மனித சகோதரத்துவத்தைப் பிரச் சாரம் செய்து, அதன்படிச் செயலாற்றி வாழும்போது. அது பரவித்தான் தீரும்! அதன் ஈர்ப்பு சக்தியை மறுத்திட முடியாது. அது பெற்றுள்ள வெற்றியே அதற்குச் சான்று கூறும்.'' இவ்வாறு எழுதியவர், பேராசிரியரும் பேரா ராய்ச்சியாளருமான பகவன் தாஸ் அவர்களின் திருமகனும், சென்னேயின் ஆளுநராக இருந்தவருமான ஸ்ரீ பிரகாசா. இவ்வாறு அவர் எழுதியதோ, கூறியதோ முஸ்லிம்களைத் திருப்திப்படுத்துவதற்காக, அவர்கள் மத்தியில் அல்ல!

ஆர்கனைஸர் (ORGANISER) பத்திரிகையின் தீபாவளி சிறப்பு இதழில் 1968 ம் ஆண்டு அவர் எழுதியது இது! (பக் : 14)

எனவே உலகம் உண்மையை அறிந்துவருகிறது. பொய்ம் மையின் பனிமூட்டம் கலேந்து, சத்தியத்தின் பேரொளி பர வித் தீரும். சத்தியத் திருமறை இப்பேருண்மையை வலியுறுத் திக் கூறுகின்றது.

அந்தப் பனி மூட்டத்தைச் சிறிது கலேத்து, உண்மை ஒளிக்கீற்றாக இலங்கும் கலேமாமணியவர்களின் இந் நூலைப் பெரிதும் வரவேற்கிறேன். தங்களிடமிருக்கும் இன் னும் ஏராளமான ஆதாரங்களைக் கொண்டு, இந்த ஆய்வை மேலும் விசாலப்படுத்தி எழுத அவர்கள் நாட்டம் கொண் டுள்ளார்கள். இன்ஷா அல்லாஹ் அவர்கள் மேலான எண் ணம் சிறந்து வெற்றிபெற்றிட வல்ல நாயனிடம் பணிந்து துஆக் கேட்கின்றேன்.

வ ஆகிரு தஃவானு அனில் ஹம்து லில்லாஹி ரப்பில் ஆலமீன்.

15—5—1405 அன்பன்

6—2—1985 அப்துல் வஹ்ஹாப்

15, லெப்பை தெரு ஆசிரியர் ''பிறை''

ஆலந்தூர்
சென்னே—600 016

# பாயிரம்

"ஒன்று பட்டால் உண்டு வாழ்வு. நம்மில் ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வே!"

இது மகாகவி பாரதியின் விடுதலைப் பாட்டு.

இன்று சில சுய நலமிகள், இந்த மா கவிஞனின் வாக்கியத்தை, விடுதலை வீரர்களின் வாய் முழக்கமிட்ட தேசிய எழுச்சி வாசகத்தை மாற்றிப் பாடத் தொடங்கியுள்ளனர்.

ஆம். இந்து முஸ்லிம் ஒன்று பட்டால் உண்டு தாழ்வு! இந்த ஒற்றுமை நீங்கின் நமக்கு நல் வாழ்வே! எனக் குரல் கொடுக்க முனைந்து விட்டனர்.

இந்தத் தீய ஒலியால் தேசம் மீண்டும் அன்னியனுக்கு அடிமைப்படும் என்பதை உணர்ந்துள்ள தேசியப் போராட்டத் 'தலைவர்கள்' கூட கண்டிக்க அஞ்சுகின்றனர். மீண்டும் தேசத்தை அடிமைப் படுத்தும் செயலைச் செய்யாதீர்கள் எனத் தடுத்திடாதுள்ளனர்.

நான் இந்தியச் சுதந்திரப் போராட்ட வீரர்களினிடையே கடைசித் தொண்டன். "இந்து முஸ்லிம் ஒன்றுபடுக" என முழக்கமிட்டவன். என்னால் நாட்டை அடிமைப்படுத்துகின்ற நாசக் குரல் ஒலிப்பதைப் பார்த்துக் கொண்டு சும்மா இருந்திட இயலவில்லை. எனவே, நமக்குள் 'பிளவு' உண்டாக்கும் வேலை யாரால் எப்பொழுது ஆரம்பமாயிற்று, அதனால் நாமும் நாடும் அடைந்த துன்பம் என்ன? என்பதை இக்கால இளைஞர்களின் மனத்திலே பதிய வைத்திட இச் சிறு நூலை யாத்துள்ளேன். காந்திஜீயை நேருஜீயை வாயால் வாழ்த்திப் பயன் இல்லை. அவர்கள் எண்ணத்தைச் செயல்படுத்த இந்து முஸ்லிம் ஒற்றுமை இன்றும் வேண்டும், இனியும் வேண்டும், என்றும் வேண்டும். இந்த எண்ணத்துடன் 'இந்து முஸ்லிம் பகைமை' தோற்றுவிக்கப்பட்ட வரலாற்றைச் சான்றுகளுடன் தொட்டுக் காட்டியுள்ளேன். இன்னும் விரிவாக எழுதிட வேண்டும். நம் நாட்டு இளைஞர்கட்கு தேசம் மீட்கப்பட்ட வரலாறு தெரிந்தால் மட்டும் போதாது. நாட்டை அடிமைப்படுத்திட உதவிய ஆயுதம், எதிரி பயன்படுத்திய கருவி எது என்பதும் தெரிந்திருக்க வேண்டும். இந்த எனது எண்ணமே இந்நூல் தோன்றிடக் காரணம். நூலிற்கு அரிய முன்னுரை வழங்கிய ஆலிஜனாப் மௌலவி எம். அப்துல் வஹ்ஹாப் (பிறை ஆசிரியர்) அவர்கட்கும் இதனை 'இஸ்மி' மாத இதழில் தொடர் கட்டுரையாக வெளியிட்ட அதன் ஆசிரியர் கவிஞர் இ. பதுருத்தீன் அவர்களுக்கும் நன்றி.

—கவி. கா.மு. ஷெரீப்

# இஸ்லாம் இந்து மதத்திற்கு விரோதமானதா?

உலகிலுள்ள எந்த மதத்திற்கும் (சமயத்திற்கும்) இஸ்லாமியச் சமயம் விரோதமானதன்று. இது நபிகள் நாயகம் (சல்) அவர்களின் நல்லுரை மட்டுமின்றி திருக்குர் ஆனின் கருத்துமாகும்.

பொதுவாக பல பாட்டைகள் ஒரு நகரத்தைச் சென்றடைவது போன்றதே சமயங்கள் அனைத்தும் என்பது, இந்தியத் தத்துவம்.

இந்தத் தத்துவப்படி உலகத்தில் தோன்றிய சமயங்கள் அனைத்தும் ஒரு கொள்கையின் அடிப்படையில்தான் இருக்க வேண்டும்! இயங்க வேண்டும்!

அப்படித்தான்—அடிப்படை எல்லாச் சமயங்களுக்கும் பொதுவாக அமைந்திருக்கிறதென்பதை எவரும் மறுப்பதற்கில்லை.

இதனை நாம் விளங்கிக் கொள்வதற்கு சமயங்கள் தோறும் சென்று ஆராய்ந்து கொண்டிருக்க வேண்டுமென்ற அவசியமில்லை.

உலகிலுள்ள சமயங்களை, கடவுளை ஏற்றுக் கொண்டுள்ள சமயங்களென்றும், கடவுளை ஏற்க மறுக்கின்ற சமயங்களென்றும் இரு பகுப்பாகப் பகுக்கலாம்.

கடவுள் இல்லை என்கின்ற சமயங்களைப் பற்றி நாம் இங்கு ஆராயத் தேவையில்லை.

ஏனென்றால், இஸ்லாம் கடவுளை, அதிலும் ஒரே கடவுளை, உருவமற்ற கடவுளை ஒப்புக் கொண்டு இயங்குகின்ற சமய மாகும். இந்த அடிப்படை கடவுளை நம்புகின்ற எந்த ஒரு சமயத்திற்குமே புறம்பானதன்று.

இதனால்தான், 'இஸ்லாம் எந்தச் சமயத்திற்கும் விரோத மானதன்று' என நபிகள் நாயகம் (சல்) அவர்கள் உரைத் துள்ளார்கள் எனலாம்.

அப்படியாயின், கடவுளை ஏற்காத சமயங்களைப் பற்றி எப்படி? என்ற கேள்வி எழலாம். இதற்கு திருக்குர்ஆனில் உள்ள 'அவர்கள் வழி அவர்களுக்கு; உங்கள் வழி உங்களுக்கு' என்ற கருத்தின் வழிப்பட்ட வாசகம் பதிலாக உள்ளது.

எனவே, எந்த ஒரு சமயத்திற்கும் (மதத்திற்கும்) இஸ்லாம், விரோதமாக இருக்கவில்லை. இஸ்லாமியர்கள் தாங்கள் ஏற்றுக் கொண்டிருக்கின்ற கொள்கை வழி நடப்ப வர்கள். அவர்கள், தங்களுக்கு மாற்றமான கொள்கையுடைய வர்களுடன் வலியச் சென்று போராடுகின்றவர்கள் அல்லர்.

இந்த அடிப்படையைக் கொண்டு நோக்குமிடத்து இஸ் லாம், இந்து மதத்திற்கு விரோதமானதென்று எவரும் சொல வதற்கில்லை. ஆனால்,

இந்து மதத்தின் தத்துவத்தை அறியாத, அழிக்க முயல் கின்ற சிலர்தான், ''இந்துமதத்திற்கு இஸ்லாம் பகையானது'' என்று பறைசாற்றுகின்றனர். அவர்களின் அக்கூற்றை ஒரு சவாலாக ஏற்றுக் கொண்டு பதிலுரைப்பதென்றால், முதலில் எழுகின்ற கேள்வி இஸ்லாம், இந்து மதத்தின் உண்மையான தத்துவத்திற்கு மாறுபட்டதா? அல்லது இந்துமதத்தில் காலக் கிரமத்தே தோன்றிவிட்ட சில பழக்க வழக்கங்களுக்கு மாறு பட்டிருக்கின்றதா? என்பதற்கு அவர்கள் பதில் தந்தாக வேண்டும்.

ஆனால், இன்றைய நாள்வரை இப்படி ஒரு கேள்வியை தனக்குத்தானே எழுப்பிக் கொண்டு எந்த ஒரு இந்துமத தத்துவவாதியும் விளக்கங் கூறி, இஸ்லாத்தின் மீது கண்டனம் தெரிவித்தார்களில்லை.

நாம் அறிந்தவரை, உலகத்திலுள்ள கடவுளை நம்புகின்ற எந்த ஒரு மதத்திலும், கடவுள் இரண்டு என்ற தத்துவம் இருப்பதாகக் தெரியவில்லை. நடை முறை எதுவானாலும் கடவுள் ஒன்று தான் என்ற நம்பிக்கை இல்லையென்றால், அது கடவுளை நம்புகின்ற சமயமாகாது.

இதே போன்றே கடவுளுக்கு உருவம் இல்லையென்பதை, கடவுளை நம்புகின்ற எல்லாச் சமயங்களுமே, ஏற்றுத் திகழ் கின்றன என்பது தான் நாம் அறிந்த உண்மை.

இந்த உண்மையை, அதாவது கடவுள் ஒன்றே, கடவு ளுக்கு உருவமில்லை என்ற தத்துவத்தை, இந்துமதம் ஒப்புக் கொள்ளாமலில்லை.

நடை முறை வேறாக இருப்பினும் தத்துவ அடிப்படையில் உருவமற்ற ஒரு கடவுளை ஒப்புக் கொண்டு இயங்குவதுதான் இந்து மதம்.

இந்து மதமும் ஒப்புக் கொண்டிருக்கின்ற இந்த ஒரு உயர் நெறியை, உண்மை நெறியை இஸ்லாமியர் ஏற்று, இம்மி யும் அந்த நெறியிலிருந்து பிறழாது நடக்கின்ற போது, இஸ்லாம் இந்துமதத்திற்கு விரோதமானதென்று சொல்லு வதற்கில்லை. நடை முறையில் மாற்றம் உளதே என்றால், மாற்றம் யாரிடத்தில் என்பதுதான் கேள்வி.

## இந்து என்றால் என்ன பொருள்?

இந்து என்கிற சொல், இந்தியாவைக் குறிப்பதாகும். எனவே, இந்து மதம் என்றால், இந்தியாவின் மதம் என்றே ஆகும்.

இந்தச் சொல், இந்தியாவினுள் வெளிச் சமயங்கள் தோன்றிய பின்னர் எழுந்த சொல் எனலாம். காரணம், தனக்குத்தானே இந்துமதம், அதாவது இந்தியமதம் என்று கூறிக் கொள்ளக் காரணம் இருக்காதல்லவா ?

வெளிநாட்டினர் இந்தியாவிற்குள் வந்த காலே தாங்கள் ஏற்றுள்ள சமயங்களில் நின்று இந்தியாவில் உள்ள சமயங்கள் நடைமுறையில்மாறுபாடுடையதாகத் தோன்றிய காரணத்தால் அவர்கள் இங்குள்ள சமயங்கட்கு ஒட்டு மொத்தமாக இட்டழைத்த பெயரே இந்துமதம் எனக் கூறப்படுகிறது என்ருல் அது உண்மையேயாம்.

அபுல்கலாம் ஆசாத் அவர்கள், ''இமாமுல் இந்த்'' எனச் சுட்டப்படுவார்கள். இதன் பொருள், ''இந்தியாவின் தலேவர்'' என்பதாகும். முஸ்லிம்கள் அபுல்கலாம் ஆசாத் அவர்களே, ''இமாமுல்இந்த்'' எனப்பகர்வதைக் கொண்டு அவரை ''இந்துக்களின் தலேவர்'' என்று சுட்டினர் என்ருகாதல்லவா? மற்றும் 'ஜமாஅத்தே இஸ்லாமி இந்த்'' என்கின்ற பெயரில் இந்தியா முழுவதற்குமான ஒரு அமைப்பு இயங்கி வருகிற தென்பதை அறிவோம். இதன் பொருள் ''இந்திய இஸ்லாமிய மக்களின் சபை'' என்ருகின்றது. முஸ்லிம்கள் தங்களின் சமயம் சார்ந்த சபை ஒன்றினுடன் ''இந்த்'என்ற பெயரையும் இணைத்துக் கொள்வதிலிருந்து இந்து என்பது இந்தியாவைக் குறிக்கின்ற சொல் எனத் தெரிகிறது. எனவே இந்துமதம் எனருல் அது இந்தியாவின் மதம் என்ருகுமே தவிர வேறு பொருளேத் தராதென்பது தெளிவு. ஆகவே, இந்துமதம் என்பது இந்தியாவில் தோன்றிய சமயங்கள் அத்தனேக்குமான மொத்தப் பெயரென்ருகின்றது என்றுரைப்பார்களின் கூற்றில் உண்மை இருக்கிறது. இன்னென்று :

இந்து சமயம் என்கின்றபோது, அது ஒரு தனித் தத்துவத்திற்கு உரியதன்று என்பது தெளிவு. அதாவது;

'வைணவம்' என்ருல் அது விஷ்ணு வணக்கத்திற்குரிய மதம் என்ருகின்றது. இதுபோன்றே,

''சைவம்'', சிவ வணக்கச் சமயம் ஆகும்.

காணபத்தியம் என்பது, கணபதி (பிள்ளையார்) வணக்கக் காரர்களின் சமயம் ஆகும்.

'கௌமாரம்' என்பது, முருகனைப் பிரானக ஏற்றுள்ளாரின் சமயம் என்பர். இன்னும், சக்தி வணக்கம, இந்திர வணக்கம் போன்ற பல சமயங்கள்! பெயரை உரைத்தாலே வணங்கும் தெய்வம் எது எனக்கூறி விடுகின்ற தன்மையில் அமைந்திருக்கக் காணலாம். ஆனல், இந்து மதம், அல்லது இந்து சமயம் என்று கூறினல் அதற்குரிய தெய்வம் எது என பகுத்துரைக்க இயலாது. மேலே சொன்ன எல்லாவிதத் தெய்வங்களுடன் பெயர் குறிப்பிட்டடங்காப் பல தெய்வ வழி பாடுகளையும் இந்து மதத்தில் காண்கின்ருேம். எனவே தான் ''இந்து மதம் என்பது ஒரு தனி மதமன்று. பல மதங்களின் தொகுப்பு'' என, இந்து சமய ஆய்வாளர்களே குறித்து வைத்துள்ளனர்.

இந்தியாவில் தோன்றிப் பௌத்த, சமண சமயங்களுப கூட வலுவற்றுத் தனித்தன்மையை இழந்து இந்துமதத்தின் ஒரு அங்கம் என்பது போன்று காட்சி தருவதால இன்றைய இந்தியாவில் இஸ்லாமும், கிறித்துவமும் மட்டுமே தனித் தன்மை பெற்ற இரு சமயங்களாக வலுவுடன் நிற்கின்றன. ஆக,

இந்துமதம் என்ற தொகுப்புப் பட்டியலில் தங்கள் சமயங் களையும் இஸ்லாமியரும் கிறித்துவரும் இணைததுக் கொள்ளாத தினல், இணைத்துக் கொள்வதை விரும்பாததினல் இவ்விரு சமயங்கட்கும் மாறுபட்டதாக இந்து மதம் என்ற சொல் பயன் படுததப்படுகின்றதென்ருல் பொருந்தும். இதர வகையில் இந்து சமயம் என்கின்ற தொகுப்புச் சமயங்கள் பேசுகின்ற உண்மையான தத்துவத்திற்கு இஸ்லாயிய சமயம் எந்தெந்த வகையில் மாறுபட்டிருக்கிறது? என்பதை சமயாச்சாரியர்கள் சுட்டிக் காட்டியதில்லை. காட்டிடவும் இயலாது.

இந்துமத விற்பன்னர்கள், வேதகாலம் என்றொரு காலக் கணிப்பைத்தருவர். அக்கால மக்கள் தெய்வ வழிபாட்டில் எத்தன்மையினராயிருந்தனர் எனத் துல்லியமாகக் கூறினார்கள் இல்லை. ஆனாலும், அக்கால ரிஷிகளின் வாழ்க்கை நெறி, வணக்க நெறி பற்றி இயம்பப்பட்டுள்ளதைப் படிக்கின்றோம்.

வேதகால ரிஷிகள் காடுசார்ந்த வாழ்வினர். அவர்களில் பலர் குடும்பிகள். மனைவி, ஏன் மனைவிகள் குழந்தைகள் எல்லாம் அவர்கட்கு உண்டு. இவர்களில் பலர் பலசாத்திரங்களைத் தந்துள்ள கர்த்தாக்களாகவும் பேசப்படுகின்றனர். ஆனால் இவர்கள் வணங்கிய தெய்வங்களின் பெயர் இதுதான் என்று நிச்சயித்துக்கூற இயலாதாயுள்ளது. இது போன்று இவர்களைப் படிவ (உருவ) வணங்கிகளாகவும் கண்டுரைக்கப் பட்டிருக்கவில்லை. இவர்களின் வழிமுறையை ஒட்டி இந்தியாவில் இன்றுள்ள சமயம் எது? இவர்களின் நெறிக்கு இஸ்லாம் மாறுபட்டதா? ஆம் எனில் எவ்விதம்?

இஸ்லாமியச்சமயக் கொள்கைகளில் எது ஒன்றையும் எந்த வகையிலும் இந்து சமயத்தினரால் குறைகூற இயலாது.

''இறைவன் ஏகன், பிறப்பற்றவன், இறப்பற்றவன், பிணிமூப்பில்லன், மனைவி மக்கள் இல்லாத் தனியன், உடன் பிறப்புக்கள் இல்லான், பெற்றோரில்லான், உருவிலி, ஒப்பிலி, காணற்கியலான், கருத்தால் மட்டுமே அவனை நாம் உணர இயலும், இப்பிரபஞ்சத்தைப் படைத்தவன், காப்பவன், அழிப்பவன் அவனே. அவனின்றி ஓர் அணுவும் அசையாது. அவன் முன்னர் ஏழையும் பணக்காரனும் சமமே. சாதிப் பிரிவுகள் மனிதன் படைத்துக்கொண்டதே. இறைவன் ஏற்றத் தாழ்வுகளையோ, சாதி பேதங்களையோ விரும்பாதவன். இன்னதரத்தான் என்று அறுதியிட்டு உரைக்க இயலா இயல்பினன்...''

இவை அனைத்தும் இஸ்லாமிய நெறி என்று ஒரு முஸ்லீம் கூறினால், ''எங்கள் சமய நெறியும் இதுதான்'' என்று மார் தட்டிக் கூறிட ஓர் இந்துவினால் இயலும். இந்து சமயம்

மட்டுமின்றி உலகில் உள்ள, இறைநம்பிக்கையுடைய எல்லாச் சமயங்களுமே மேலே கூறப்பட்டுள்ள நெறிகளை ஒப்புக் கொள்ளத்தான் செய்கின்றன. ஆனால் நடைமுறை தான் சரியில்லை. சொல்லும் செயலும் ஒன்று பட்டிருப்பதே உயர்ந்த நெறியாகும். ஆனால், கடவுள் நெறியில் இஸ்லாமியர்களைத் தவிர்த்து வேறு சமயத்தாரிடம் சொல்லும் செயலும் ஒன்று பட்டிருக்கவில்லை என்பது கண்கூடு.

''ஒன்றேகுலம், ஒருவனே தேவன்'' என்பது இந்து சமயத்தில் இணைந்துள்ள சைவசமயத்தாரின் கொள்கை. ஆனால் நடைமுறையில்?

''பண்ணேன் உனக்காக பூசை (உன்னை) ஒரு வடிவிலே பாவித்து'' என்பது தாயுமானவரின் இறைவணக்க நெறி. ஆனால் இதர இந்துக்களின் நிலை, நெறி?

''கல்லிலும் செம்பிலும் உள்ளானோ கண்ணுதல?'' என்று கேட்பார் ஒரு இந்து சமய ஞானி. ஆனால் அச் சமய மக்கள்?

''கேட்டாலும் அழியாதான், கேடொன்றில்லான். கிளையொன்றில்லான். கேளாதே எல்லாம் கேட்பான்'' இது மாணிக்கவாசகரின் மணிமொழி—திருவாசகம்.

''அண்டம் கடந்த பொருள், அளவிலாததோர் ஆனந்தப் பொருள். பண்டும் இன்றும் என்றும் உள்ள பொருள் ''

—சேந்தனார் திருப்பல்லாண்டு.

> ''அங்கே கண் செல்லாது, வாக்குச் செல்லாது, மனது செல்லாது, அதை நாம் (உள்ளபடி) அறியமாட்டோம். ஆகையால் அதுபற்றி உபதேசிக்கும் வழியும் தெரியவில்லை, அது நாம் அறிந்த பொருள் ளை விட வேறு அறியாத பொருள்களுக்கும் அப்பால்பட்டது...''
>
> ''காதுக்குக் காதாயும் மனதுக்கு மனதாயும் வாக்குக்கு வாக்காயும் உள்ளது எதுவோ அதுவே பிராணனுக்குப் பிராணனும் கண்ணுக்குக் கண்ணும் உளது...''
>
> —கேனோபநிஷத்,

உபநிஷத்துகள் பல. அவற்றை இந்து சமயவேதங்களின் சாரம் என்பர். அந்த உபநிஷத்துக்களில் ஒன்றே கேனோப நிஷத். அது கூறுகிறது: ''கடவுள் காதுக்குக் காதாயும் மனதுக்கு மனதாயும் வாக்குக்கு வாக்காயும் பிராணனுக்குப் பிராணனாயும் கண்ணுக்குக் கண்ணாயும் உள்ளான். நாம் அறி யாத்தரத்தவன்' என்று. மற்ற ஞானவான்களின் கூற்றுக் களையும் கண்டோம். இவை யாவும் இந்து சமயம் ஒப்பி உள்ள வைகளே. ஆனால் நடைமுறையில்தான் இல்லை. இஸ்லாமி யர்கள் இவற்றை அப்படியே ஏற்றிருப்பது மட்டுமின்றி நடைமுறையிலும் கைக் கொண்டொழுகுகின்றனர். ஒரு வகையில் சொல்வதென்றால் இந்து சமய ஞானிகள் உரைத் திருப்பதை. இந்து சமய வேத சாரமான உபநிஷத் புகலுவதை முஸ்லிம்கள் நடைமுறைப்படுத்தி அவற்றிற்கு உயிர்ஊட்டி வருகின்றனர். இந்துக்கள் கொள்கை அளவில் ஏற்று, ஆனால் நடைமுறைப்படுத்த இயலாதிருப்பதை இஸ்லாமியர் நடை முறைப்படுத்துகின்றனர் என்றால், இந்துக்கள் இஸ்லாமியர் கட்கு நன்றியல்லவா செலுத்த வேண்டும்? எங்களால் இய லாததை நீங்கள் செயல் படுத்தி எங்களின் உண்மைத்தத்துவங் களை நிலைபெறச் செய்து வருகிறீர்களே! உங்களுக்கு எங்களின் வாழ்த்துக்கள் என்று கூறி வாழ்த்த அல்லவா வேண்டும்? ஆனால் நடைமுறை?

வழி தவறியவர்கள் நேர்வழி செல்வோரை இகழ்ந்துரைக் கின்றனர். ஆனால் ஒன்று. இஸ்லாமியத் தத்துவத்தை இன்றுவரை எந்த ஒரு இந்துவும் குறை கூறியதில்லை. கூறவும் இயலாது.

இஸ்லாம் விஞ்ஞான வழியில் சிறிதும் பிசகின்றி நடக் கின்ற நெறியாகும் என்பதை சமய அறிவுடைய விஞ்ஞானிகள் ஏற்றுள்ளனர். உதாரணமாக—

அண்மையில் பிரஞ்சு விஞ்ஞான மேதை ஒருவர் பைபிளை யும் திருக் குர்ஆனையும் விஞ்ஞான உரைகல்லில் உரைத்துப் பார்த்துள்ளதைக் கூறலாம். அவர் கண்ட முடிவு—

''பைபிளில் விஞ்ஞானம் ஒப்பக்கூடியது ஒன்றுமே இல்லை; திருக்குர்ஆனிலோ விஞ்ஞானத்திற்கு மாறுபட்டது இல்லவே இல்லை'' என்பதாம்.

இக்கருத்தினை வெளியிட்டுள்ள விஞ்ஞானியின் பெயர், திரு, டாக்டர் மாரிஸ் புகையில் என்பதாகும். கிறித்துவரான இவர் பிரெஞ்சு நாட்டினர் ஆவார். திருக் குர்ஆனை அதன் மூலமொழியான, அரபி மொழியிலேயே படித்தறிந்தவர், பைபிளையும் சரியாகப் படித்தறிந்துள்ளார். இவர் எழுதிய நூல் தமிழில் மொழிபெயர்ப்பாகியுள்ளது. நூலின் பெயர், ''விஞ்ஞான ஒளியில் பைபிளும் திருக்குர்ஆனும்'' என்பதாகும்.

இந்து சமயச் சன்மார்க்கிகள் கூறியுள்ள தத்துவங்களில் பெரும்பான்மை இஸ்லாமியத் தத்துவத்திற்கு ஒத்திருக்கக் காணலாம். இவர்களையொத்தவர்களே வேதகால ரிஷிகளும். அவர்கள் தம் உரைகளிலும் இஸ்லாமிய நெறிமுறை பெருக் கெடுத்தோடக் காணலாம். இந்த வேத கால ரிஷிகளின் கைப்பட்டதே உபநிஷத்துக்கள். உபநிஷத்துகளின் அடிப் படை, இறைநெறிக்கொள்கை இஸ்லாத்திற்கு மாறுபட்டிருக்க வில்லை என்பதைக் கண்டோம்.

இன்னொன்றை நாம் கவனிக்கவேண்டும். அதாவது, கடவுளை நம்புகின்ற சமயங்களில் இஸ்லாம் ஒன்றைத்தவிர்த்து ஏனைய சமயங்கள், சிறப்பாக இந்து சமயம் வீடுபேறு பற்றிய கோட்பாட்டை, குறிக்கோளை மட்டுமே முதலும் முடிவுமாகக் கொண்டிருக்கக் காண்கிறோம். குறிப்பாக.

படிப்பறிவு என்பது கடவுளை அறிந்து கொள்ள விரும்பு கின்ற, அறிந்துரைக்கக் கூடிய மேலவர்கட்குத் தேவையே தவிர ஏனையோருக்கு உழைப்பும் கேள்வி ஞானமும் போதும் என்பதாகும். இஸ்லாம் இக்கருத்திற்கு முரணானதாகும். அதாவது,

உலக வாழ்வில் ஆண்பெண் என்கின்ற இரு பகுப்பாருக் கும் கல்வி அவசியம் என வலியுறுத்துவதாகும். அதாவது,

உலக வாழ்விலிருந்தே வீடுபேறு என்கின்ற மறு உலக வாழ்வு விளைவாகின்றது என்பதே இஸ்லாம். உலக வாழ்வு அநித்தியம், அதைத் துச்சமென ஒதுக்கித்தள்ளித் துறவு சேர்வோர்க்கே மோட்சம் என்பது இந்துமத போதம். அதனுற் ருன் இல்லற வாசிக்கும் கூட வானப் பிரஸ்தமும் பின்னர் துறவு நிலையும் பேசப்படுகிறது.

இந்து சமயங்கள், கடவுள் நெறியை உரைக்கின்ற நூற்களை, வேத இதிகாச ஞான நூற்களென்றும் உலக வாழ்வியல் நூற்களை, அறநூற்களென்றும் பிரித்துள்ளன.

இஸ்லாமியர்கட்கு, வீடு பேறு பெற வழிகாட்டுவதும் உலக வாழ்விற்கான சட்ட திட்டங்களை வகுத்துரைப்பதும் திருக்குர்ஆன என்கின்ற திருமறைதான். எனவே இஸ்லாமியன் ஒருவன் திருக்குர்ஆனுக்கு மாறுபட்டு நடப்பது தண்டனைக்குரிய குற்றம் ஆகிறது. உதாரணமாக விபச்சாரத்தில் ஈடுபட்டால் அது ஒரே முறைதான் என்ருலும் ஈடுபாடு கொண்ட ஆண், பெண் இருவருமே தண்டனைக்குள்ளாகின்றனர். இந்து சமய வேதங்களில் இதுபற்றிய குறிப்பில்லாததினுல் விபச்சாரம் அங்கீகரிக்கப்பட்ட ஒன்ருக ஒப்புக்கொள்ளப்பட்டு அதற்கென தேவதாசி என ஒரு சாதியே உண்டாக்கப்பட்டு விட்டது. தேவதாசி முறையை அரசியல் சட்டம் கொணர்ந்து ஒழிக்கப்பட்டது சமீப ஆண்டுகளில்தான். அதுபோது கூட இந்து சனுதனிகள் தாசிகள் ஒழிப்புச்சட்டம் கூடாதெனக் கூச்சலிட்டனர் என்பது வரலாறு.

இதே போன்று, ஒருவன் எத்தனை மனைவியுடன் வாழலாம் என இந்து சமயத்தில் வரையறை இல்லை. இஸ்லாம் ஏக காலத்தில் நான்கு மனைவியர்க்கு மேல் கூடாதென்கிறது. இதைப்பார்க்கின்ற இந்துக்கட்கு வியப்பாகத் தோன்றுகிறது. ஒரு மனைவியுடன் வாழ்வதே தங்கள் மத ஆச்சாரம் என நம்பு கிருர்கள். ஒருவனுக்கு ஒருத்தி என்பது சமீப காலத்திய இந்திய அரசியல் சட்டம். அந்தச் சட்டமும் சட்டப்படி மனைவியாகக் கொள்வதைத் தடுக்கின்றதே தவிர, சட்டப்படி அல்லாத மனைவியருடன் வாழ்வதைத் தடுக்கவில்லை.

நம்முடன் வாழுகின்ற இந்து சமயத்தைச் சார்ந்தவர்களில், பலர், ஒரு மனைவி சட்டப்படிக்கும் பல மனைவி சட்டமல்லாத வழியிலுமாகக் கொண்டு வாழுவதைக் காணுகிறோம். இந்த நிலையை இந்து சமயத் தலைவர்களில் யாரும் கண்டித்தாகத் தெரியவில்லை. அத்தகையோரைப் பாராட்டி ஆசீர்வதிக்காமல் இருந்ததுமில்லை. இஸ்லாமியன் ஒருவன் பகிரங்கமாக இப்படி சட்டப்படி அல்லாத மனைவியுடன் வாழ்ந்து விடுவது என்பது நடைபெறக் கூடியதன்று. நமது நாட்டில் இது (இஸ்லாமி நாடு அல்லாததினால்) யாரேனும் ஒரு முஸ்லீம் அப்படி வாழ்வாரேயானால் முஸ்லிம் சமுதாயத்திலிருந்தே அவர் புறக் கணிக்கப்பட்டு விடுவார்.

தெய்வங்கட்கே பல மனைவியர் பேசப் படுவது இந்து சமயத்தின் நடைமுறை. இவற்றுக்கு முற்றிலும் மாறானது இஸ்லாம்.

இஸ்லாமியத் தத்துவத்தை மறுக்க முடியாததினால் நான்கு மனைவிக் கதைகளையும் கத்னு (விருத்தசேதனம்) செய்வதையும், இஸ்லாமியப் பெண்கள் வீட்டுக்கு விலக்கானால் தனித்திருக் காமையையும், பலர் ஒன்றாக சேர்ந்து உண்பதையும், தட்டு களில் சாப்பிடுவதையும், குவளையை வாயில் வைத்துத் தண்ணீர் குடிப்பதையும் ஒரு காலத்தில் சனாதன இந்துக்கள் குறை கூறினர். இன்று இவை அனைத்தும் அவர்கள் இல்லங் களில் புகுந்திருப்பதைக் கண்டும் காணாதவர் போன்று இருக் கின்றனர்.

இவைபோன்றே, இஸ்லாமியத் தத்துவத்தை மறுக்க வியலாத நிலையில், ''இஸ்லாம் தத்துவார்த்தமாக நல்ல மார்க்கமாக இருக்கலாம் சார், ஆனால் அது வாள் கொண்டு பரப்பப்பட்டதாயிற்றே' என்கின்றனர். இன்று அதுவும் செல்லுபடியாகாததாகி விட்டது. காரணம், இன்றைய உலகம் ஆதாரமின்றிக் கூறுவதை ஏற்பதாயில்லை. வாள் கொண்டு இஸ்லாம் எங்கே எப்பொழுது யாரால் பரப்பப் பட்டது? ஆதாரம் என்ன நீங்கள் கூறுவதற்கு? என முஸ்லிம்

கேட்க வேண்டியதில்லை. நடுநிலைமனமுள்ள பள்ளி மாணவன் கேட்கின்ற காலம் இது. எனவே படித்தும் பதராகிவிட்ட சில ஏமாளிகள் வேண்டுமானால் இஸ்லாம் வாள்கொண்டு பரப்பப்பட்டதாகச் சொல்லப்படுகின்ற கதையை நம்பலாம். அதுவும் கற்ற நன்மனத்தவரால் தள்ளி எள்ளி நகையாடப் படும். அத்தகைய விழிப்பான காலம் வந்து கொண்டிருக் கிறது.

இஸ்லாம் வாள் கொண்டு பரப்பப்பட்ட மார்க்கம் என்பதைப் பாமர மக்களின் மனத்தில் பதியவைக்கும் நோக் கில் தொடர்ந்து பிரச்சாரம் செய்யப்பட்டு வருகிறது.

இக்கூற்றை முதன்முதலில் துவக்கியவர் யார் எனத் தெரியவில்லை. ஆனால் நீண்ட நெடுங்காலமாகக் கூறப்பட்டு வருகிறது எனினும் இக்கூற்றை எந்தப் பாமரனும் நம்பு வதாயில்லை. படித்தவர்களில் சிலர் மட்டும் ஆய்வின்றி எங்கோ, எவரோ எழுதியதைப் படித்து விட்டு தாங்கள் கற்றதே உண்மை என நம்பி, அல்லது வேண்டும் என்றே திரும்பத் திரும்ப உரைக்கின்றார்கள் எனக் கருத வேண்டி யுள்ளது. இதில் ஒரு அதிசயம் என்னவென்றால்;

அத்வைத தத்துவத்தை வலியுறுத்துகின்ற 'சிவசமக் கோள்' சமயம் சார்ந்த மடத்தின் தலைமை பீடத்தில் இருக்கின்ற ஸ்ரீலஸ்ரீ காமகோடி பீடமாகிய மதிப்புமிகு சங்கராச்சாரியார் சுவாமி அவர்களே கூட இதைச் சொல்லத் தவறவில்லை. ஆம், சில ஆண்டுகட்கு முன்னதாக, கல்கி எனும் வார ஏட்டிலே "ஒரு கையில் வாளும் ஒருகையில் குர்ஆனும் ஏந்தி, இதில் எது வேண்டும்? என்று கேட்டு குர்ஆனை ஏற்குமாறு செய்து பரப்பப்பட்ட மதம் இஸ்லாம் மதம்" என்பதாக மதிப்புமிகு காஞ்சி பெரியவாள் எழுதினார்கள்.

நாம் அறிந்த வரையில் உலகில் எந்த ஒரு சமயமும் வாள் கொண்டு பரப்பப்பட்டதாகத் தெரியவில்லை. அப்படிச்

செய்து தோல்விகண்ட ஒரே ஒரு சம்பவம் மட்டுமே உலகில் நடந்துள்ளது. கி. பி. 12, 13 வது நூற்றுண்டில் அன்றைய வாடிக்கன் குருபீடத்தின் ஆசியுடன் ஈராக், ஈரான், எகிப்து ஆகிய இஸ்லாமிய நாடுகளின் மீது நடத்தப்பட்ட சிலுவைப் போர் ஒன்றுதான் அது. விடாமல் பலமுறை படைஎடுப்பு நடத்திய அந்தப் போரின் போது தான் மதச்சின்னமாகிய சிலுவையும் அச்சிலுவை முனையில் பைபிளும் இருந்ததாக வரலாறு இயம்புகின்றது. வலிந்து இஸ்லாமியர்கள் மீது திணிக்கப்பட்ட அந்த போரில் தோல்வி கண்ட ஐரோப் பியரை, மன்னித்திருக்கிறது இஸ்லாம் என்ற உண்மை யினை படித்தோர் அறிவர். இது தவிர்த்து மதப் பரப்பிற் கென ஒரு போர் எந்த நாட்டிலும் எந்தக் காலத்திலும் நடந் திருப்பதாக நாம் படித்ததில்லை. காமகோடிபூடம் ஆச்சாரியப் பெரியவாள் கூறுகின்ருர்கள், இஸ்லாம் வாள் கொண்டு பரப்பப்பட்டதென்று. இதற்கு அவர்கள் ஆதாரம் எதுவும் காட்டவில்லை. குற்றம் சாட்டிடும்போது சான்றுரைப்பது அவசியம் அல்லவா?

தற்காப்புப் போர்புரிந்தது மட்டுமே இஸ்லாமியப்போர் வரலாருக உள்ளது. ஆனல் முகம்மது நபி ஆக்ரமிப்புப்போர் நடத்தினுர் என்று மேனுட்டுச் சரித்திர திரிபாசியர்களில் சிலர் கதைத்துள்ளனர்.

தான் பிறந்து வளர்ந்த மக்கமா மாநகரில் இஸ்லாமியப் பிரக்சாரம் செய்ய இயலாதபடி அங்குள்ள பல தெய்வ உருவ வணங்கிகள் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கட்குத் தொல்லே கொடுத்தார்கள். கொன்று விடவும் முயன்ருர்கள். அதே நேரத்தில், மதீனு நகரவாசிகள் தங்கள் நகரில் வந்து வசிக்கும் படிக்கும் இஸ்லாமியப் பிரச்சாரம் செய்யும்படிக்கும் நபிகள் நாயகம் அவர்களே அழைத்தார்கள். 53ம் வயதில் தமது தோழருடன் நள்ளிரவில் புறப்பட்டு கிட்டத்தட்ட முந்நூறு மைல்கட்கு அப்பால் உள்ள மதினமா நகருக்கு நாயகத் திருமேனி அவர்கள் சென்று விட்டார்கள். அதன் பின்னரும் மக்காவாசிகள் ஓய்ந்திருக்கவில்லே.

ஒரு முறையன்று; கிட்டத்தட்ட 28 முறை படையெடுப்பில், அல்லது பிறரைப் படை எடுக்கத் தூண்டும் முயற்சியில் மக்கமாநகரவாசிகள் ஈடுபட்டனர். ஆனால் ஒரு முறைகூட அவர்கள் வெற்றி பெறவில்லை. அவர்களில் பலர் சிறைப்பட நேர்ந்ததுண்டு. தங்கள்பால்கைதிகளாக்கப்பட்டுள்ள, தங்களைப் பகைத்தழிக்க முயன்ற மக்காவாசிகளை நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நடத்திய விதத்தை இஸ்லாத்தை வெறுத்தொதுக்கு கின்ற மேனாட்டு ஆசிரியர்கள் கூட பாராட்டவே செய் துள்ளனர்.

ஏழு ஆண்டுகட்கு மேல் பொறுத்துப் பார்த்த பின்னர் இவர்கள் நம்மை நிம்மதியாக இருக்க விடமாட்டார்கள் எனக் கண்ட பின்னரே மக்க மாநகருக்குள் தமது தோழர்களுடன் நுழைந்தார்கள் நாயகத் திருமேனி அவர்கள். இந்தப் பிர வேசத்தைப் படையெடுப்பு என்று சொல்வதற்கில்லை. ஏனென்றால் சண்டை நடக்கவில்லை; யாரும் கொல்லப்பட வில்லை; துளி இரத்தம் கூடச் சிந்தப்படவில்லை; யாரையும் கைதியாகப் பிடிக்கவில்லை. நாமக்கல் கவிஞர் பாடுவாரே ''கத்தியின்றி ரத்தமின்றி யுத்தமொன்று வருகுது'' என்று, அது முதன் முதல் நடந்தது நபிகள்நாயகம் (ஸல்) அவர்களின் அறவழியில்தான். ஜெயசீலராக மக்கமநகருக்குள் நுழைந்த நபிகள் நாயகம் அவர்கள் அந்த நகரவாசிகட்கு விடுத்த அறிவிப்பு;

> ''நீங்கள் விரும்பினால் இஸ்லாத்தில் சேரலாம். இஸ்லாத்தில் கட்டாயமில்லை. நீங்கள் அனைவரும் மன்னிக்கப்பட்டு விட்டீர்கள்'' என்பதுதான்.

தங்களை நபிகள் நாயகம் அவர்கள் மன்னிப்பார்கள் என மக்காவாசிகள் நினைத்திருக்கவில்லை. எனவே அவர்கள் கொண்ட மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை.

நாயகத்திருமேனி அவர்கட்கு ஏற்பட்டு வருகின்ற செல்வாக்கைக் கண்டு பொறாமையுற்ற ரோமர்களும் பர்சிய

நாட்டினரும் தங்கள் தங்கள் மன்னரின் ஆணைப்படி நாயகத் திருமேனி அவர்களை எதிர்த்துப் படை திரட்டினர். அவர்களைப் பெருமானார் காலத்திலும் அதன் பின்னர் வந்த கலீபாக்கள் காலத்திலும் எதிர்த்துப் போர் நடத்தியது உண்மையே. ஆனால் அது தற்காப்புப் போரே யன்றி வலிந்து மேற்கொண்ட எதேச்சாதிகாரப் போர் அன்று. இஸ்லாமியர்களிடமிருந்த நேர்மைக்காக இறைவன் அவர்கட்கு வெற்றியை நல்கினான்.

''வாளா, திருக்குர்ஆனா'' என்ற அடிப்படையில் சென்றிருந்தால் இறைவன் நிச்சயம் வெற்றியை நல்கி இருக்க மாட்டான். ஆனால் வேண்டுமென்றே இஸ்லாத்தைப் பகைப்பவர்கள் வாள்கொண்டு இஸ்லாம் பரப்பப்பட்டதென்று திட்டமிட்டுப் பொய்ப் பிரச்சாரம் செய்கிறார்கள்; செய்து வந்துள்ளார்கள்.

உலகெங்கும் இஸ்லாம் பரவக் காரணமாக இருந்தவர்கள் ''சூபிகள்'' எனப்படும் இஸ்லாமிய ஞானிகள் என்பது தான் வரலாறு.

இந்தியாவிலும் கி. பி. எட்டாம் நூற்றாண்டிலேயே குமரிமுனையிலிருந்து சூபிகள் மூலமாக இஸ்லாம் பரவத் தொடங்கிற்று என்பது வரலாற்றுண்மை. இந்த உண்மையை காந்தி அடிகளின் நெருங்கிய நண்பரான சுந்தர்லால் என்கிற வரலாற்றாசிரியர் தெளிவாகக் கூறியுள்ளார்.

''இஸ்லாம் இந்தியாவில் முதன்முதல் நுழைந்தது கைபர் கணவாய் வழியாக அல்ல. இந்து மகாசமுத்திரத்தின் வழியாக தெற்கு முனைக்கு வந்த சூபிகளால்தான் இஸ்லாம் அது தோன்றிய அடிநாளிலேயே பரவிற்று. வடக்கில் முகலாயர்களின் படையெடுப்பு நடந்திடவில்லையானால் இந்தியா முழுவதுமே இஸ்லாம் பரவி நிலைத்திருக்கும். அவ்வாறு நடவாமல் செய்தவர்கள் மொகலாய அரசர்களே யாவர்'' என்கிறார், திரு சுந்தர்லால்.

இவர் ''வாள் கொண்டு இங்கே இஸ்லாம், பரப்பப்படவில்லை, அதனுடைய சமத்துவ சகோதர சமாதானக் கொள்கை

யின் அடிப்படையைக் கொண்டேதான் பரவிற்று'' என்கின்றார்.

காந்தி அடிகளின் நண்பர்களில் ஒருவரும், வரலாற்றாசிரியருமான சுந்தர்லால் கூற்றேயன்றி நம்மைச் சுற்றியுள்ள நாடுகளை உற்று நோக்கினால் இஸ்லாம் வாள்கொண்டு பரப்பப்பட்ட மார்க்கம் அன்று என்பது விளங்கும். உதாரணமாக,

இந்து மாகடல் பகுதியில் உள்ள தீவுகளில் ஒன்று மால் தீவு என்பது. இச்சிறிய தீவு, இந்தியா—இலங்கையையொப்ப வெள்ளையன் கீழ் அடிமைப்பட்டிருந்தது. இன்று அது சுதந்திர நாடு. சின்ன அந்தத் தீவின் மக்களின் எண்ணிக்கை ஒரு லட்சத்திற்கு மேலில்லை. இத் தீவின் மக்கள் அனைவரும் முஸ்லீம்களே. இவர்கள் வேறு எங்கிருந்தும் குடியேறியவர்களோ, குடியேற்றப்பட்டவர்களோ அல்லர். அனைவரும் அந்தத் தீவின் பூர்வீகக் குடிமக்களே. இவர்கள் ஆதியில் முஸ்லிமாக இல்லாதிருந்து பின்னர் முஸ்லிமாக ஆனார்கள் என்பதே இவர்கள் வரலாறு. இவர்களை எந்த சுல்தான் (முஸ்லிம் அரசன்) வாள்கொண்டு இஸ்லாத்தில் ஆக்கினான்?

ஈராக் நாட்டில் பன்னிரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த மகாஞானியும், ஞானிகளின் வேந்தருமான முகையித்தீன் அப்துல் காதர் ஜீலானி என்ற, சூபிகளின் தலைவர் வருகையின் பேரில் இவர்கள், அதாவது மால்தீவு என்கின்ற 'மஹல்ல தீவு' மக்கள் அனைவரும் இஸ்லாத்தில் ஆயினர் என்பது வழக்காறு. மொரோக்கோ நாட்டினரான அபுல்பரக்கத்து பெர்பெரி எனும் ஞானியரால்தான் இஸ்லாம் அங்கு பரவிற்றென்றும் உரைப்பர்.

மால்தீவை யொட்டியுள்ள நாடு ஸ்ரீலங்கா என்னும் இலங்கை. இங்கே வாழுகின்ற மக்களில் எட்டுச் சதவிகிதத்தினர் முஸ்லீம் என்று சொல்லத்தக்க வகையில் அங்கே முஸ்லிம்கள் வாழுகின்றனர். இவர்கள் வெளி நாடுகளிலிருந்து குடியேறியவர்கள் அன்று. யாழ்ப்பாணத் தமிழர்களைப் போன்று இவர்களும் இலங்கையின் பூர்வீகக் குடியினரே,

தாய்மொழியும் கூடத் தமிழ்தான் இவர்கட்கும். எந்த சுல்தான் (முஸ்லிம் வேந்தன்) அங்கு சென்ருன்? வாள் கொண்டு வென்ருன்? இஸ்லாத்தை இலங்கையில் பரப்பிஞன்? இலங்கையின் மீது எந்த முஸ்லிம் மன்னனும் படை நடத்திச் சென்றதாக வரலாறில்லையே! அங்கே இஸ்லாம் பரவியுளதே? எப்படி?

இலங்கையில் மட்டிலும் அன்றி, மலேசிய நாடு முழுவதிலும் உள்ள பூர்வீகக் குடிகள் அனைவரும் முஸ்லிம்களே. இவர்களின் எண்ணிக்கை அண்மைக் கணக்கின்படி ஒருகோடி என்றறிய முடிகிறது. இந்த மலேயா நாட்டின் மீது ராஜேந்திரச் சோழன் வரை தமிழ்மன்னர்கள் படையெடுத்துச் சென்றதாக வரலாறுண்டு. ஆனல் எந்த ஒரு முஸ்லிம் சுல்தானே பாதுஷாவோ (மாமன்னன்) மலேசியா மீது படைகொண்டேகியதாக வரலாறில்லை. அவ்வாறிருந்தும் மலேசியா நாட்டின் பூர்வீகக் குடிமக்கள் அனைவருமே முஸ்லிம்களாக உள்ளனரே அது எப்படி? வாள்கொண்டுதான் இஸ்லாம் பரப்பப்பட்டதென விள்ளுகின்ற கனவான்கள் இதில் கவனம் செலுத்தினர்களா? செலுத்துவார்களா?...

மலேசியாவை அடுத்துள்ள நாடு இந்தோனீஷியா. ஜாகர்தாவைத் தலைநகராகக் கொண்ட இந்த நாடு. ஜாவாவிலிருந்து பல தீவுகளால், தீவுக்கூட்டங்களால், ஆனவை. இதன் பூர்வீகக் குடிகள் அனைவரும் முஸ்லிம்களே! ஒரு காலத்தில் இத்தீவுகளில் இந்து சமயம் பரவி இருந்ததென்பர். இந்தோனீஷியாவின் அடிமைத் தளையை அறுத்தெறிந்தவர் டாக்டர் சுகர்ஞே. இவர் முஸ்லிம். இவருடைய பெயர் 'கர்ணன்' என்ற பெயரில் இருந்து திரிந்து ஆனது என்று இந்து சமய ஆய்வாளர்கள் உரைக்கின்றனர். இவர்களின் கூற்றின்படி ஒரு காலத்தில் இந்து சயயத்தினர்களாக வகழ்ந்த இந்தோனீஷியர் அனைவரும் இஸ்லாமியர்கள் ஆனது எப்படி? யாரால்? இங்கேயும் வாளைத் தூக்கிக் கொண்டு

முஸ்லிம் மன்னர்கள் நுழைந்தார்களா? அவ்வாருயின் அந்த முஸ்லிம் மன்னர் யார்? எந்த நாட்டினர்? பெயர் யாது?

உண்மை இதுதான், மேற்கு ஆசியாவில் அராபியாவில் தோன்றிய இஸ்லாம், நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் காலத்திலேயே அவர்கள் தம் தோழர்களால் மத்திய ஆசியாவிலும் கிழக்கு ஆசியாவிலும் தூர கிழக்கு ஆசியாவிலும் கூட பரவத் தொடங்கிற்று. அந்த நபித் தோழர்கள் வாணிகர்களாக இருந்ததினுல் அவர்கள் வணிகம் புரிந்த நாடுகளிலெல்லாம் இஸ்லாம் சென்று பரப்புவாரின்றியே அதனுடைய மேம்பாட்டின் காரணமாகத் தாஞகவே பரவலாயிற்று. இந்த அரபி இஸ்லாமிய வணிகர்களுடன் சென்ற ஞானவான்களான சூபிகளாலும் அவர்கள் தம் அன்பு, பண்பு, அடக்கம், ஈகை, இரக்கம், நோய் நீக்கல், தொழுகை, நோன்பு நோற்றல் போன்ற நன்னடத்தைகளே பிரச்சார சாதனங்களாகவும், அமைந்து இஸ்லாத்தைப் பரப்பியுள்ளன என்பதே உண்மை.

இதில் இன்னொரு அதிசயம் என்னவென்ருல், சுமார் ஆயிரத்திருநூறு ஆண்டுகட்கு முன்னே அறிமுகமாகி எண்ணூறு ஆண்டுகட்கு மேலாக (இஸ்லாமிய மன்னர்களால்) ஆளப்பட்டு வந்த இந்தியாவில் முஸ்லிம்கள் சிறுபான்மையினராகவே உள்ளனர். ஆனல், எந்த ஒரு முஸ்லிம் மன்னனின் காலடியும் படாத மால்தீவு, மலேயா, இந்தோனீஷியா ஆகிய நாடுகளின் குடிமக்கள் முழுக்க முழுக்க முஸ்லிமாக உள்ளனர். இதுமட்டுமின்றி மேலே சொன்ன நாடுகளின் தாய் மொழிக்கான (லிபி) எழுத்துக்கள் முழுமையாக அரபி எழுத்துக்களாகவே உள்ளன. இந்தியாவில் இந்த நிலை இல்லையே, ஏன்?

வாள்கொண்டு இஸ்லாம் பரப்பப் பட்டதாகக் கூறப்படுகின்ற இந்தியாவில் உருதும் பஞ்சாபியும் இந்துஸ்தானியும் மட்டுமே அரபி லிபியைக் கொண்டிருக்கும் போது, இஸ்லாமிய மன்னர்களின் கால் படாப் பூமியாகிய மால் தீவு,

மலேயா. இந்தோனீஷியா ஆகிய நாடுகளின் மொழிக்குரிய எழுத்துக்கள் அரபி லிபியாக இருப்பது எப்படி என்று யோசித் தார்களில்லை. யோசித்திருந்தால் இஸ்லாம் வாள்கொண்டு பரப்பப்பட்டதன்று என்பதை உணர இயலுமே!

இங்கே காந்தி அடிகளின் நண்பரான சுந்தர்லால் என் கின்ற வரலாற்றாசிரியரின் மற்றொரு வாசகத்தையும் நாம் கருத் தில் கொள்ள வேண்டும்.

''இஸ்லாம் அதன் அடி நாளிலேயே இந்து மாக்கடல் மார்க்கமாக வந்த அரபி வணிகர்களாலும் அவர்களுடன் வந்த சூபிகளாலும் மிக வேகமாக இங்கே (இந்தியாவில்) பரவ லாயிற்று. இடையே வடக்கே முகலாயரின் படையெடுப்பு நடந்திராவிடில் இந்தியா முழுவதும் இஸ்லாம் மயமாக ஆகியிருக்கும். இதை யாரும் தடுத்திருக்க இயலாது.''

அறிஞர் சுந்தர்லால் அவர்களின் இக்கூற்றை உற்று நோக்கின் நாடாளும் ஆசை வெறி பிடித்த ஒரு சில அண்டை நாட்டு இஸ்லாமிய வேந்தர்களின் செயலாலேயே இந்தியா ''முஸ்லிம் மய'' மாவதிலிருந்து தடுக்கப் பட்டிருக்கிறது என்றாகின்ற தல்லவா அவர்தம் கூற்றின்படி? (உண்மையும் அதுதான்) இந்தியா முழு அளவில் இஸ்லாமிய நாடாகாமல் செய்தவர்கள் முஸ்லிம் மன்னர்களின்றி இங்குள்ள இதரர்கள் அன்று என்கின்றபோது இஸ்லாம் வாள்கொண்டு பரப்பப் பட்டதென்பது எப்படி? ஆனால் ஸ்ரீலஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமிகள் உள்ளிட்ட இந்துமத 'மாமேதை'கள் அனைவரும் கூறுகின்றனர்; இஸ்லாம் வாள் கொண்டு பரப்பப்பட்ட தென்று. வாள் கொண்டு பரப்பப்பட்டிருக்குமானால் அதன் நிலை எதுவாயிருக்கும்?

உதாரணத்திற்கு இன்றைய ஸ்பெயின் நாட்டை எடுத்துக் கொள்வோம். அங்கே கி. பி. எட்டாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இஸ்லாம் பரவ ஆரம்பித்து 15 - ந்தாம் நூற் றாண்டு வரை அங்கே ஒரு இஸ்லாமியப் பேரரசு நடந் துள்ளது.

இந்தப் பேரரசு அந்த நாட்டை கல்வியாலும் கலாச்சார மேம்பாட்டாலும் தொழில் வளத்தாலும் விவசாயப் பெருக்கத் தாலும் கட்டிக்கலை, தோட்டக்கலை போன்றவற்ருலும் உயர் வடையச் செய்தது என்பது முஸ்லிம் அல்லாத வரலாற்ருசிரியர் களும் ஒப்புக் கொண்டிருக்கின்ற ஒன்று, ஆனுல், எந்த ஒரு வரலாற்ருசிரியனும் அங்கிருந்து கிருத்துவ மதத்தை, அங்கு நடந்த இஸ்லாமியப் பேரரசு வெளியேற்றியதாக குறித் தானில்லை.

கிருத்துவர்களென்ன, கிருத்துவ சிற்றரசுகளும் அங்கு நடந்த இஸ்லாமியப் பேரரசின் கீழ் ஆட்சிச் சுதந்திரத்தோடு மதச் சுதந்திரமும் பெற்று இயங்கி வந்தன என்பதை நேரிய வரலாற்ருசிரியர்கள் செப்பவே செய்கின்றனர்.

பிற மதத்தை, மத ஆலயங்களை, அம்மதம் சார்ந்த அறிஞர் களை, மத குருமார்களை யெல்லாம் சிறுமைப் படுத்தாது வாழச் செய்துவந்த ஸ்பெயின் நாட்டு இஸ்லாமியப் பேரரசை 15 - ந் தாம் நூற்ருண்டில், அந்நாட்டு கிருந்துவ சிற்றரசொன்றில் தோன்றிய இஸபெல்லா என்ற பெண்மணி தன்னேடு மற் ருெரு சிற்றரசனையும் திருமணம் மூலம் இணைத்துக் கொண்டு அழித்தொழிப்பதில் முற்பட்டாள்.

இஸ்லாமிய அரசை அகற்றுவதில் அவளோ அல்லது அவனே அல்லது இரண்டு பேரும் இணைந்தோ மேற்கொண்ட நடவடிக்கைகளை அரசியல் எழுச்சி, வீழ்ச்சி என்ற அடிப்படை யில் உலகம் மறந்து விடலாம், அல்லது மன்னிக்கலாம். ஆனுல் மிகப் பெரும் அந்நாட்டில் ஒரே ஒரு முஸ்லிமைக்கூட வாழுமாறு அவ்விருவரும் விட்டுவைக்கவில்லை.

கசாப்புத் தொட்டிக்கு ஆட்டுமந்தைகளை வளைத்தும் பிணைத் தும் இழுத்துச் செல்வது போன்று ஆண், பெண், முதியோர் இளைஞர், சிறுவர் என்று பாகுபாடின்றி முஸ்லிம் சமயத்தாரை வளைத்துப் பிடித்துக் கட்டி இழுத்துச் சென்று கொன்று தீர்த்தாள் இஸபெல்லா.

அவள் கேட்டது வாளா, கிருத்துவமா? என்பதுதான். கிருத்துவத்தை ஒப்புக் கொள்ளாமல் முஸ்லிம்கள் அனைவரும் இஸபெல்லாவினால் பலியானார்கள். ஒரு முஸ்லிம் கூட எஞ்ச வில்லை. ஆம், ஒரேயொரு முஸ்லிம் கூட இஸபெல்லா எடுத்த நடவடிக்கையில் ஸ்பெயின் நாட்டில் எஞ்சியிருக்கவில்லை.

இந்த வரலாற்றை இங்கே ஏன் நினைவு படுத்துகிறேன் என்றால், இஸபெல்லா கேட்டது வாளா, கிருத்துவமா என்பது. அந்த முறையைத்தான் இங்கே இஸ்லாமியப் பேரரசர்கள் அதற்கு முன்பாகவே கடைப் பிடித்தார்கள், வாளா குர்ஆனா? என்றுபோர் தொடுத்தார்கள் என்று ஸ்ரீலஸ்ரீ சங்கராச்சாரியார் சுவாமி போன்றோர் கூறுவார்களேயானால், ஆயிரமாண்டுகள் இஸ்லாமியப் பேரரசர்கள் ஆண்ட இந்தியாவில், அந்த ஆயிர மாண்டுகளிலிருந்து இன்றுவரை இஸ்லாமியர்கள் சிறுபான்மை இனமாக இருப்பது எப்படி? என்று நாம் கேட்பது அவர்கள் சிந்தித்துப் பார்க்கட்டும் என்பதற்காகத்தான்.

15.ந்தாம் நூற்றாண்டிலே ஒரு முஸ்லிம்கூட இல்லாது ஸ்பெயினில் அழிக்கப்பட்ட தென்றால்—அங்கே முஸ்லிம்களே இல்லாது செய்யப் பட்டுவிட்ட தென்றால்—இந்தியாவில் இஸ்லாமியப் பேரரசுகள் நடந்தபோதும் சரி, அதன் பின்னர் இன்று வரையிலும் சரி இஸ்லாமியர்களும் இந்துக்களும் சகோதர வாஞ்சையுடன் பழகி வாழ்ந்து வருகிறார்களே, அப்படியிருக்கும் இந்த நாட்டில், இஸ்லாம் வாள்கொண்டு பரப்பப்பட்டதென்ற கூற்று மூளைக்கு ஏற்புடையதாக இருக் கிறதா? என்று ஸ்ரீலஸ்ரீ காமகோடி பீடம் ஆச்சாரியசுவாமி அவர்கள் சிந்திக்க வேண்டும்.

இஸ்லாமியப் பேரரசர்கள் இந்துமத ஆலயங்களுக்கும் மடங்களுக்கும் வழங்கியுள்ள மான்யங்கள் ஏராளம், ஏராளம்!

இதுபோன்றே இஸ்லாமிய ஞானப் பெரியார்கள் அடங்கி யுள்ள இடங்களுக்கு (தர்காக்களுக்கு) இந்துக் குடிமக்களே யன்றி இந்துப் பேரரசர்களும் வழங்கியுள்ள மான்யங்கள் நிறைய உண்டு.

வாள்கொண்டு இஸ்லாம் பரப்பப் பட்டிருக்குமானால், இந்த பரஸ்பர ஒத்துழைப்பு, உபகார அன்னியோன்ய வாழ்க்கைநெறியை வகுத்தளித்தவர்கள் யார் என்பதையும் ஸ்ரீலஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமிகள் கவனிக்க வேண்டும்.

இங்கே இன்னொன்றையும் கவனிக்க வேண்டும். டில்லி, ஆக்ரா, பீஜப்பூர் போன்ற பழம்பெரும் நகரங்களில் நீண்ட நெடுங்காலம் இஸ்லாமியப் பேரரசு கோட்டைகள் அமைத்து, ஆட்சி புரிந்திருந்த வரலாறு நமக்குத் தெரியும்.

அந்த நகரங்களிளெல்லாம் அன்றும் சரி இன்றும் சரி, பெரும்பான்மையினராக வாழ்பவர்கள் இந்துப் பெருங்குடி மக்கள்தாம்.

தெற்கே ஆற்காட்டில் நீண்ட நெடுங்காலமாக இஸ்லாமியப் பேரரசு ஆட்சி புரிந்திருக்கிறது. அங்கே அன்றும் இன்றும் பெரும்பான்மையினர் இந்துக்கள்தான்.

திருச்சிராப் பள்ளியில் இஸ்லாமிய ஆட்சி நடைபெற்றதுண்டு. அங்கும் நிலை இதுதான். ஏன், ராமன் ஆண்ட அயோத்தியிலும் வெள்ளைக்காரன் வரும் வரை இஸ்லாமிய நவாபுகளின் (மன்னர்களின்) ஆட்சி நடைபெற்றுக்கொண்டு தான் இருந்தது. அங்கும் கூட என்றுமே இஸ்லாமியர்கள் சிறுபான்மையாளர்தாம்.

அண்மைக் காலம் வரை ஹைதராபாத்தில் இஸ்லாமிய மன்னராட்சி நடைபெற்று வந்ததை நாமறிவோம். அந்த மன்னராட்சியிலேயே அவருடைய தலைநகரமான ஹைதராபாத்தில் கூட இஸ்லாமியர்கள் சிறு பான்மையினர்தாம்.

வாள்கொண்டு இஸ்லாம் பரப்பப்பட்டதென்று மனந் துணிந்து, அறிந்தே பொய் கூறுகின்றவர்களுக்குக் கூறுவேன்: வாள்கொண்டு இஸ்லாம் பரப்பப்பட்டிருக்குமானால், அந்த இஸ்லாமிய மன்னர்கள் வாழ்ந்த தலைநகரிலேயே இஸ்லாமியர்கள் சிறுபான்மையினராகவும் இந்துக்கள் பெரும்பான்மையினராகவும் இந்து மன்னர்களின் தலைநகரங்களில்

முஸ்லிம்கள் பெரும் பான்மையினராகவும் வாழுகின்ற அரிய காட்சி, வாளேந்திய சமயத்தார்க்கும் வாளுக்கு இரையானார்கள் என்று கூறப்படும் சமயத்தாருக்குமிடையே நடக்க முடியுமா?

''சுமார், எண்ணூறுண்டு காலம் இந்தியாவை முஸ்லிம்கள் ஆண்டிருந்தும் அவர்கள் ஆண்ட தலைநகரங்களிலே கூட முஸ்லிம்கள் சிறுபான்மையினராகத்தான் வாழ்ந்து வந்துள்ளனர்'' என்கின்ற உண்மையோடு இன்னொரு பேருண்மை, வெள்ளையராட்சி இங்கு தோன்றும் வரையில் இந்து முஸ்லிம்கள் எந்தவித வேற்றுமையுமின்றி கலந்து பழகி வாழ்ந்து வந்துள்ளனர் என்பதாம். உதாரணமாக, முஸ்லிம் மன்னர்களிடம் இந்து மாவீரர்களும், இந்து மன்னர்களில் இஸ்லாமிய வீரர்களும் போர்ப்படையினராக இருந்ததே இந்திய இந்து முஸ்லிம் வரலாறு, ''முஸ்லிம்களின் மாபெரும் விரோதி'' என்று பின்னாளில் வெள்ளையர்களால் கற்பித்து எழுதிவைக்கப்பட்டுள்ள மாமன்னன் சிவாஜி சத்ரபதியின் தம்பியும், சிறிய தந்தையும் பீஜபூர் சுல்தானிடம் பெரும் பதவி வகித்தவர்கள் என்பது வரலாற்றுண்மை. தஞ்சையில் ஏற்பட்டிருந்த நாயக்க மன்னர்களின் கடைசி மன்னனான மன்னார் நாயக்கன் காட்டில் ஓடி மறைந்த பின்னர் ஆட்சி பீடமேறிய சிவாஜியின் தம்பி, பீஜபூர் சுல்தானின் கீழ் மூவாயிரம் போர் வீரர்களை வழி நடத்துகின்ற தளபதியாகப் பணியாற்றியவர். சிவாஜியின் தட்சிணப் படையெடுப்பும் பீஜபூர் சுல்தானின் படைத்தளபதி என்கின்ற பெயரில் நடந்தது தான். செஞ்சியை ஆண்ட ஜெய்சிங் (தேசிங்) கின் தந்தை டில்லிப் பாதுஷாவின் சார்பில் செஞ்சியில் மறைந்திருந்த விஜயநகரப் பேரரசின் கடைசி வாரிசாளரைப் பிடிப்பதற்குப் படை நடத்தி வந்து டில்லிப் பேரரசின் சார்பில் செஞ்சியில் ''இராணுவ ஆட்சித்'' தலைவராக இருந்து நாடாண்டவர் தான். இவைகளைப் போன்று ஆயிரமாயிரம் நிகழ்வுகளை அடுக்கடுக்காக நமது வரலாறுகள் கூறக் காண்கிறோம்.

முஸ்லிம்கட்கும் இந்துக்கட்கும் பகை இருந்திருக்குமானுல் முஸ்லிம் மன்னர்களிடம் இந்துத் தலைவர்களும் வீரர்களும் இந்து மாமன்னர்களிடம் முஸ்லிம் தலைவர்களும் தளபதிகளும் எப்படிப் பணிபுரிந்திருக்க வியலும்? பணி புரிந்ததோடன்றி-வெற்றி தேடி அளித்திட போரிட்டிருக்க முடியும்?

ஒன்றை நாம் நினைவில் கொள்ள வேண்டும். அதாவது இந்தியாவை ஆண்ட முஸ்லீம் மன்னர்களும் சரி, இந்து மன்னர்களும் சரி தங்கள் தங்கள் மதங்களை நிலைநாட்டிடப் போர் புரிந்திடவில்லை. தங்கள் தங்கள் ஆட்சியை விரிவுபடுத்திக் கொள்ளவே போரிலீடுபட்டனர். சிவாஜியும், அவுரங்கஜேபும் பகைத்துப் போரிட்டுக் கொண்டதற்கு அடிப்படையும் இதுதான். எனவேதான் இவர்களின் ராஜ்யங்கள் விரிவடைய இந்து மன்னர்களிடம் முஸ்லிம் படை வீரர்களும் தளபதிகளும், முஸ்லிம் அரசர்களிடையே இந்துப்படை அணியினரும் வீரத் தளபதிகளும் இணைந்து நின்று போர் புரிந்துள்ளனர். மதப் போர் என்ருல் இவை நடந்திருக்க இயலாது அல்லவா? இந்து முஸ்லிம் ஆகிய இருசாராரின் சுதந்திர வாழ்விற்கும் வெள்ளைய ராட்சி வேட்டு வைக்கக் கூடியது என்பதினுலேயே வெள்ளைய ராட்சியை எதிர்ப்பதில் முஸ்லிம் மக்கள் மட்டுமின்றி மன்னர்களும் ஒன்றுபட்டு நின்றனர். வெள்ளையன் தங்கள் ஆட்சிக்குக் கீழ்ப்படியுமாறு ஜான்ஸி ராணிக்கு அனுப்பிய கடிதத்திற்கு ஜான்ஸி ராணி அனுப்பிய பதில், கடிதமல்ல. தனது தளபதியின் (முஸ்லிம்) தோட்டாவை அவரிடமிருந்து பெற்று ''இதுவே எனது பதில்'' என அந்த வீரமங்கை அனுப்பியதை வீர வாக்கியங்களில் நமது வரலாறு உரைக்கக் காண்கின்ருேம். மீண்டும் நினைவுபடுத்திக் கொள்வோம்.

இங்கே இந்து முஸ்லிம் பகைப்பு மதப்போர் நடந்திருக்குமானுல் இவ்வாறு நடந்திருக்க இயலுமா? இன்னென்றை நாம் நினைவு கூர்ந்து கொள்வது மிக மிக அவசியம். அதாவது,

இந்து முஸ்லிம் ஒற்றுமையைக் கண்ட வெள்ளையன் இந்த ஒற்றுமை சிதைந்தால் ஒழிய இந்த நாட்டினை நாம் ஆளமுடியாது; ஆம், ஆளவே முடியாது என உணர்ந்தான். இந்து முஸ்லிம்களிடையே பகைப்பு எண்ணம் வளர்ந்திடும் வகையில் வரலாற்றினைத் திரித்து எழுதிடலானான்! இன்று நம்மிடையே உள்ள நமது வரலாறுகளெல்லாம் வெள்ளையன் எழுதியவை, அல்லது அவற்றை ஆதாரமாகக் கொண்டு எழுதப்பட்டவைதானே? இன்று, வெள்ளையன் போய் விட்டான். ஆனாலும் அவன் வைத்த தீ, இந்து முஸ்லீம் பகை நெருப்பு, அணையவில்லை. மாறாக வளர்ச்சி பெற்று வரக் காண்கிறோம். இது எதிலே முடியும்? எங்கே கொண்டுவிடும்? என்கின்ற தீர்க்கதரிசனக் கண்ணோட்ட வளர்ச்சி நமது இளைஞர்களிடம் இல்லை. வருந்தத்தக்க இந்நிலைவுடன் வெள்ளையரரட்சியை எதிர்த்து நம்மவர்கள் நடத்திய போராட்ட நாட்களில் இந்து முஸ்லிம் ஒற்றுமை உணர்வு எவ்வாறிருந்துளது என்பதை நாம் நினைவில் கொள்வது அவசியம்.

வெள்ளையராட்சியில் முதல் சிப்பாய்க் கலவரம் 1806-ல் ஜுலை மாதத்தில் வேலூரில் வெடித்தது. அந்த (ச்சுதந்திர)ப் போரில் கலந்து கொண்ட சிப்பாய்கள் முஸ்லிம்களாக மட்டுமோ இந்துக்களாக மட்டுமோ இருந்திடவில்லை. இரு சமயச் சிப்பாய்களும் தோள் இணைந்து நின்றே போரிட்டனர். ஒரே நாளில் நூற்றெழுபது வெள்ளை அதிகாரிகளை வேட்டு வைத்துத் தீர்த்தனர். ''சூரியன் அஸ்தமனமாகிடா ஆட்சி' யைக்கொண்ட வெள்ளையரின் ஆட்சிக்கொடியான யூனியன் ஜாக் எனும் கொடி, மிகக் கம்பீரத்துடன் வேலூர்க் கோட்டை முகப்பில் நெடிய கம்பம் ஒன்றில் பறந்துகொண்டிருந்தது. அதைப் பறக்க விட்டிருந்தார்கள் அங்கிருந்த வெள்ளை அதிகாரிகள். சுதந்திர ஆர்வம் கொண்ட நமது சிப்பாய்கள் வெள்ளையரின் தோட்டாவுக்கு மார்பினையீந்து கொண்டே கம்பத்தில் ஏறி, யூனியன் ஜாக் கொடியை இறக்கினர். இறக்கியதோடல்லாமல் தமது தேசியக் கொடியை அதே

கம்பத்தில் ஏற்றி வைத்து அதற்கு மரியாதை செலுத்தினர். ஆம், இந்து முஸ்லிம் என்ற பாகுபாடின்றி நாம் அனைவரும் இந்தியர்களே என்ற உணர்வுடன், தேசியகொடிக்கு மரியாதை செலுத்தினர். அன்று ஏற்றிய தேசியக் கொடி எது தெரியுமா? திப்பு சுல்தானைக் கொன்று அவர் தம் குடும்பத்தினரை வேலூர்க் கோட்டையில் கொணர்ந்து சிறைப் படுத்தி வைத்திருந்ததே வெள்ளையராட்சி, அந்தக் குடும்பத் தாரிடம் இருந்த திப்புசுல்தானின் ஆட்சிக் கொடியைத்தான் அன்று போரிட்ட நமது இந்து-முஸ்லிம் சிப்பாய்கள் அனை வரும் தேசியக் கொடியாக முதல் இந்திய தேசியக் கொடியாக ஏற்றி வைத்துத் தங்களின் சுதந்திர வேட்கையை வெளி யிட்டார்கள்.

எண்ணிப் பார்க்க வேண்டும். ''இந்துக்களின் விரோதி திப்புசுல்தான்'' என்று சரித்திரம் படைத்தளித்து நம்மிடையே சண்டையை மூட்டிவிட்டிருக்கிறார்களே, அவர்களின் கூற்று உண்மையானால், இந்துக்களை அழிக்கின்ற பணியை திப்பு சுல்தான் செய்திருப்பாரேயானால் அவருடைய ஆட்சிக் கொடியை இந்துச் சிப்பாய்களும் சேர்ந்து எப்படி ஏற்றி வைத்திருப்பார்கள்? தேசத்தில் உள்ள இந்துத் தலைவர்கள் தான் எப்படி அதை ஒப்பியிருப்பார்கள்? அன்றும் சங்கரர் மடங்கள் இருந்தன. அந்த மடங்களிலும் சங்கராச்சாரிய சுவாமிகள் இருக்கத்தான் செய்தார்கள். அவர்களேனும் எதிர்த்தார்களா? ''வாள் கொண்டு பரப்பப்பட்ட மதத்தைச் சார்ந்த அரசன் கொடி இது. இது நமது நாட்டின் தேசியக் கொடியாகாதெனக் குரல் கொடுத்தார்களா? அப்படி அவர்கள் சொல்லாததற்குக் காரணம் என்ன? அவர்கள் திப்புவின் ஆட்சியைக் கண்டவர்கள். அது எவ்வாறு நடந்தது என்பதை அறிந்தவர்கள். காஞ்சி காமகோடி மடம் போன் றல்லாமல் அதிகார பூர்வமான சங்கரர் மடங்கள் இந்தியத் திருநாட்டில் அமைந்துள்ளன. சிருங்கேரி மடம் அவ்வைத் துள் ஒன்று. திப்புவின் மூலம் எண்ணற்ற நன்மைகளை அது அடைந்ததை அன்றைய சங்கராச்சாரியாரும் இன்று வரை

யுள்ள அவருடைய வாரிசுகளும் அறிவர். அம்மடத்திலுள்ள சாசனங்களும் அவற்றை உறுதி செய்து கொண்டிருக்கின்றன.

வெள்ளேயனே வெளியேற்றி இந்தியாவைச் சுதந்திர நாடாக ஆக்க வேண்டுமென எழுந்த போராட்டத்திலே இந்துக்களுக்கு எவ்வளவு பங்குண்டோ அவ்வளவு பங்கு-ஏன் அதிலும் கூடுதலான பங்கு முஸ்லிம்கட்கு உண்டு.

''இந்தியாவுக்குச் சுதந்திரம் வேண்டாம்'' எனச் சொன்னவர்கள் இந்துக்களிலே நிறையப்பேர் உண்டு. அவர்களில் பலர் 'வெள்ளேயன்தான் இந்தியாவை ஆளவேண்டும்'' என்பதை வலியுறுத்திக் கட்சிகளே நடத்தியுள்ளனர். ஆனல், முஸ்லிம்களில் ஒரே ஒரு நபர் கூடச் ''சுதந்திரம் வேண்டாம்'' என்று கூறியதாக வரலாறில்லே. சுதந்திரப் போராட்டக் கர்த்தாக்களே முஸ்லிம்கள்தாம். இதை நாம் சொன்னல் ஏற்கமாட்டார்கள்; இந்து மகாசபையின் தலேவர் வீர சவர்க்கார் உரைக்கின்ருர்—

''முதலாவது சுதந்திர யுத்தத்தை உருவாக்கிய மகா மேதாவிகளுள் அஸிமுல்லாகானுக்குத்தான் முதல் இடம் கொடுக்க வேண்டும்...''

''எரிமலே'', பக்கம்-27

''இந்தியாவின் சுயேச்சை, ஆங்கிலேயர்களால் சிறிது சிறிதாக அபகரிக்கப்பட்டு வருவதை முதன் முதலாக அறிந்து கொண்டவர்கள், புனு நானு பர்னவிஸும், மைசூர் ஹைதர் சாஹிபும்தான்...''

—''எரிமலே''. பக்கம்-16.

மாமன்னர் ஹைதரலீ அவர்கள்தான் வெள்ளேயனே எதிர்த்த முதல்வர் என்பதுதான் வரலாறு. வீர சவர்க்கார் இந்துமகா சபையின் தலேவரானதினல், நானுபர்னவிஸையும் இணைத்துக் கூறியுள்ளார் என்பதே உண்மை. (ஆசிரியர்).

''ஒரு மௌலவியும் ஓர் ஆங்கிலேயரும் நண்பராக இருந்தனர். மௌலவி நோய்வாய்ப்பட்டு மரணப்படுக்கையிலிருந்த

போது அந்த ஆங்கிலேயரும் கூட இருந்தார். மௌலவி மரணம் அடைவதற்கு முன் உங்களது கடைசி விருப்பம் என்னவென்று ஆங்கிலேயர் கேட்டதற்கு, ''நான் உங்களுக்கு என் மனத்தில் உள்ள ஓர் ஏக்கத்தை ஒளிக்காமல் கூறுகிறேன். என் ஆயுளில் இரண்டு வெள்ளையரைக் கூட என் கையினுல் கொல்லும் பாக்கியம் எனக்குக் கிட்டவில்லையே என்று தான் வருந்துகிறேன்'' என்பதாக அந்த மௌலவி பதிலளித்தார்.''

—''எரிமலே'' பக்கம்-46

சவர்க்கார் முஸ்லிம்களைப் பகைவர்களாகக் கருதுகின்றவர்களின் தலைவர் என்பதை உலகறியும், அவரால் கூட சுதந்திரப் போராட்டத்தில் முஸ்லிம்கள் ஏற்ற மிகப் பெரும் பங்கினை மறைத்திட இயலவில்லை. அயோத்தி நவாபிடம் அவர் தம் குடிமக்கள் (இந்துக்கள்) வைத்திருந்த பேரபிமானத்தைப் படிப்போர் வியக்கும் வண்ணம் எழுதுகிருர். நவாபை வெள்ளையன் சிறைப் பிடித்தபோது அயோத்தி ராஜ்யக் குடிமக்கள் (இந்துக்கள்தான்) கதறி அழுதவிதம் பற்றிச் சவர்க்கார் உரைத்திருப்பதை முஸ்லிம்களைப் பகைப்போர் படித்துப் பார்க்க வேண்டும்.

கொதித்தெழுந்த முதற் சுதந்திரப் போரிலே கிராமங்களிலெல்லாம் கூட பச்சை (ப் பிறைக்) கொடி இல்லங்கள் தோறும் பறக்கவிடப் பட்டிருந்தாகக் குறிப்பிடுகின்ருர் சவர்க்கார்.

கொதித்தெழுந்த டில்லி மக்கள் வெள்ளையர்களைக் கொன்றுவிட்டுக் கோட்டையைக் கைப்பற்றி பஹதூர்ஷா என்னும் முஸ்லிம் மாமன்னரை வெற்றி முழக்கத்துடன் சிம்மாசனத்தில் ஏற்றினர் என்றும் அந்த முஸ்லிம் மன்னரின் கொடிதான் சுதந்திரக்கொடியாக அனைவராலும் ஒப்பி ஏற்றி வைக்கப்பட்டதென்றும் சவர்க்கார் தனது ''எரிமலே''யில் குறிக்கின்ருர்.

சவர்க்காரின் ''எரிமலே'' வெள்ளையராட்சியில் தடை செய்யப்பட்டிருந்தது. ஆனல் சுதந்திர இந்தியாவில் தடை இல்லை என்ருலும் இக்கால இளைஞர்கள் படிக்கவியலா நிலையிலே மறைக்கப்பட்டு விட்டது!

இவற்றையெல்லாம் இங்கு நான் குறித்திடுவற்குக் காரணம், இந்துக்களும் முஸ்லிம்களும் இந்த நாட்டு மக்கள் நாம் என்பதை உணர்ந்து ஒன்றுபட்டு நேச உறவு கொண் டாடி வாழ்ந்து வந்துள்ளனர் என்பதை நினைவூட்டுவதற்காகத் தான். இங்கு இந்து முஸ்லிம்களிடையே வகுப்பு கலவரம் தோன்றியதே முதலில் வெள்ளையர் ஆட்சியில்தான். அதற்கு முன்னே நடந்தவைகள் மன்னர்கள் சண்டையே தவிர மக்கள் சண்டைகளல்ல.

ஔரங்கஜேப் பாதுஷாவை எதிர்த்துச் சிவாஜி மாமன்ன ரும், சிவாஜி மாமன்னரை எதிர்த்து ஔரங்கஜேப் பாதுஷா வும் தங்கள் தங்கள் படைகளைக் கொண்டு மட்டுமே தான் போரிட்டுக் கொண்டனர். மக்கள் இவர்களில் யாருக்காகவும் பரிந்து கொண்டு எந்த ஒரு நிலையிலும் போருக்கெழவில்லை. அவர்கள் தங்களுக்குள் ஒன்றுபட்ட தன்மையில் தம் தம் தொழில்களையும் விவசாயத்தையும் கவனிப்பதில்தான் அக்கறை செலுத்தி வாழ்ந்து வந்துள்ளனர். இதர இந்து முஸ்லிம் மன்னர்களிடையே நடந்த சண்டைகளும் இவ்வாருக ஆனவை களே. ஆட்சியை எதிர்த்து மக்கள் போரிட்டது, அதாவது மக்கள் இயக்கமாகப் போராட்டம் நடத்தப்பட்டதே வெள்ளையர் ஆட்சியை எதிர்த்து நடந்ததுதான் இந்தியாவைப் பொறுத்த வரை முதல் கட்டம்.

வெள்ளையராட்சியை எதிர்த்து நடந்த போராட்டத்தில் ஆரம்பத்தில் ஒரு சில பாதிக்கப்பட்ட மன்னர்கள் சேர்ந்திருந் தாலும் அவர்கள் இயக்கத் தலைவர்கள் அல்ல. மக்கள் தலை வர்கள்தான் தலைமை தாங்கி நடத்தினர். இதில் முஸ்லிம் எண்ணிக்கை கூடுதலா? இந்துக்கள் எண்ணிக்கை கூடுதலா? எது கூடுதல் என்கின்ற ஆராய்ச்சி இங்கு தேவையில்லை.

இந்து, முஸ்லிம்கள் ஆகிய இரு சாராருமே இணைந்து நின்றே போரிட்டனர். இப்படி அவர்கள் போரிட்டதற்கான அடிப்படைக் காரணமாக இருந்தவற்றுள் தலையாயது.

இந்து சமயத்தையும் இஸ்லாமிய மார்க்கத்தையும் அழித்திட, கிருத்துவமதத்தை இந்தியாவில் நிலைநாட்டிட வெள்ளைய ராட்சி விழைகின்ற தென்கிற கணிப்பு, இந்து முஸ்லிம் மக்களிடையே, மார்க்க மேதைகளிடையே அரும்பி மலர்ந்து விரித்து நிலைபெற்றதேயாம்.

இத்தகவலை வீர சவர்க்கார் தனது ''எரிமலை''யில் தெளிவாகக் கூறுகிறார். அமெரிக்காவிலும் ஆப்பிரிக்காவிலும் அங்குள்ள சுதேசிகளிடம் கிருத்துவ மதத்தைப் பரப்புவதில் வெற்றிக்கண்ட ஆங்கிலேயர்கள், திட்டமிட்டே வெள்ளைப் பாதிரிமார்களை இங்கே இறக்குமதி செய்தார்கள் என்று குறிப்பிடுகிறார்

இந்து சமயத்தையும் இஸ்லாமிய மார்க்கத்தையும் ஆங்கிலேயக் கிருத்துவப் பாதிரிகள் வசைபாடியவிதம் இந்து முஸ்லிம் மக்களிடையே ஆங்கிலேயர் எதிர்ப்பாக உருவகமுற்ற தென்கிறார் சவர்க்கார். இங்கே ஒன்றினை நினைவில் கொள்ள வேண்டும். அதாவது, ஆங்கிலேயக் கிருத்துவர்கள் இந்து மதத்தினரையும் இஸ்லாமியர்களையும் தங்கள் மதத்தவர்களாக ஆக்கிட முயன்ற போது மக்கள் தங்களின் உயிரினையும் இழக்கத் துணிந்து எதிர்த்திடத் தலைப்பட்டார்கள் என்றால், இங்கு ஆட்சி பீடமேறிய முஸ்லிம் மன்னர்கள் இந்து சமயத்தை அழித்து இந்தியாவை இஸ்லாமியச் சமயமாக்கிட முயன்றிருந்தால், வெள்ளையர் எதிர்ப்பினை மக்கள் துவக்கியது போன்று இஸ்லாமியர் எதிர்ப்பும் இங்கே தோன்றியிருத்தல் வேண்டுமல்லவா? ஏன், தோன்றிடவில்லை?

ஆங்கிலேயர்கள் நீண்ட நெடுங்காலத்திற்கு இந்தியாவை ஆள முடியாதென்பதை உணர்ந்தே இருந்தார்கள். எனவே, தாங்கள் ஆளாவிட்டாலும், தங்களுடைய மொழியும் கலையும் கலாச்சாரப் பழக்க வழக்கங்களும் இந்தியாவை விட்டு அகலாதிருக்க வேண்டும் என எண்ணினார்கள். எனவே அதற்கானவை பற்றிச் சிந்திக்கலானார்கள். அவர்கள் சிந்தனைக் கெட்டியதே இந்து—முஸ்லிம் இடையே பகைமையை வளர்ப்ப

தென்பது. இந்த அரிய கண்டுபிடிப்பை ஆங்கில எழுத்தாளர்களைக் கொண்டு எழுதிடப் பணித்தார்கள். அவ்வெழுத்தாளர்களின் கற்பனையில் தோன்றியதே இந்துக் கோயில்களை முஸ்லிம்கள் இடித்தார்கள் என்பதும், இந்துக்களைக் கொன்றொழித்தார்கள் என்பதும்.

இவர்களின் இந்தக் கற்பனைத் புனைவுகளை இந்தியாவில் உள்ள ஒரு சில கூலி எழுத்தாளர்களும் மெய்யென நம்பித் தங்களின் கற்பனைகளையும் சேர்த்திணைத்து சரித்திரங்கள் என்கின்ற பெயரில் எழுதித் தள்ளி இருக்கிறார்கள்.

இவ்வித எழுத்தாளர்களை ஊக்குவிப்பதும் இவர்களின் பாதகமான எழுத்துக்களைப் பள்ளிப் பாடங்களாக்குவதும் வெள்ளையராட்சியின் பணியாக இருந்தது. ஒரு நூற்றாண்டுக் காலங்கட்கு மேலாகத் திட்டமிட்டுச் செய்யப்பட்ட இப்பணியினால் படித்த இந்துக்கள் மத்தியிலே முஸ்லிம்களைப் பற்றித் தவறான எண்ணம் வலுவாகப் பற்றிக் கொள்ளலாயிற்று.

முஸ்லிம்கள் இதைத் தடுத்து உண்மை விளக்கம் தருவதில் அக்கறை கொள்ளாத காரணத்தால் பொய், மெய் வடிவம் பெற்று நன்கு நிலைத்துத் தீயவை பரவிட வழி வகுத்திருக்கக் காண்கின்றோம்.

இந்தத் தீய பிரச்சாரத்தின் இன்னொரு வடிவம், மியூஸியம், பழங்காலக் கோட்டை கொத்தளங்கள் போன்றவற்றுள் உள்ள 'கைடு'கள் என்கின்ற விளக்க உரைஞர்களாலும் நடத்தப்பட்டுள்ளது. இவர்கள் அநேகமாக இந்துக்களாகவே உள்ளதால் முஸ்லிம்கட்கு எதிரான கதைகளைத் தாங்கள் விரும்பிய வாறெல்லாம் கற்பித்துரைத்து இந்துக்களிடையே முஸ்லிம்களைப் பற்றித் தவறான எண்ணங்களை உண்டாக்கிடச் செய்துள்ளனர்.

ஆம், எழுத்து வடிவக் கதைகள் படித்தவரிடையே முஸ்லிம்களின் மீது பகையை வளர்த்ததென்றால் இந்தக் 'கைடு'கள் என்கின்ற விளக்கதாரிகளின் செயலால், படிக்காத சுற்றுலாப்

பயணிகளிடையே அதே காரியத்தை அழுத்தமாகச் செய்யலாயிற்று. இதன் விளைவு? வெள்ளையன் வெளியேறிய பின்னரும் இந்தத் தப்புப் பிரச்சாரங்கள் நின்று நிலைத்து இந்து முஸ்லிம்களிடையே பகையை வளர்த்து ஒற்றுமையைச் சிதைத்திடலாயிற்று.

இனக்கலவரங்கள் ஆங்காங்கே தோன்றி இத்தியாவின் ஸ்திரத் தன்மையை அழிக்கத் தொடங்கியுள்ளதைக் காண்கின்றோம். இந்த நிலையிலும் கூட இந்திய அரசு இவ்வித எழுத்துக்களை நாட்டின் நலன் கருதித் தடுத்திடவில்லை. 'கையிடு'களின் தீய பிரச்சாரத்தை அடக்கிடவில்லை. இதில் கவனிக்க வேண்டிய தென்னவென்றால் முஸ்லிம்கட்கு எதிரிடையாக எழுதப்பட்டுள்ள—எழுதப்பட்டு வருகின்ற திட்டமிட்ட பொய்ப்பிரச்சாரம் இந்திய அரசிற்குத் தெரியாமலில்லை; இவ்வெழுத்துக்கள் தீமை பயக்கக் கூடியதாகும் என்பதும் புரியாமலில்லை. 'கெயிடு'களின் தீய பிரச்சாரம் பற்றி மத்திய மாகாண அமைச்சர்கள் அறிந்திருக்காமலில்லை. ஆனால் இத் தீய செயல்களைத் தடுத்து நிறுத்துகின்ற ஆர்வம் சிறிதும் இவர்கட்கு இல்லை.

ஒளரங்கஜேப் பாதுஷாவைப் பற்றி நமது பிரதமருக்குத் தெரியாதா? தெரியவில்லை என்றாலும் தெரிவிக்கின்ற நன்மனத்தார் பாராளுமன்றத்திலே இல்லையா? அண்மையில் ஒரு செய்தி படித்தோம். அதாவது திருவாளர் B. N. பாண்டே என்கின்ற பாராளுமன்ற உறுப்பினர் ஒளரங்கஜேப் பாதுஷாவைப் பற்றிக் கூறியுள்ளதைப் பாருங்கள்:

''நான் அலஹாபாத் பல்கலைக்கழகத் தலைவராக இருந்த போது ஸோமேஸ்வரநாத் மஹாதேவ் மத்திர் என்கின்ற ஆலயச் சொத்து பற்றிய சர்ச்சை என்னிடம் எடுத்துரைக்கப்பட்டது. அதில் ஒரு சாரார், சில பத்திரங்களைக் காட்டினார்கள். அதில் அந்த 'மந்திரு'க்கு ஒளரங்கஜேப் மன்னர் வழங்கிய மான்யம் அந்த சொத்து என்பதற்கான ஃபர்மான் பிரதி இருந்தது. கோயில்களையெல்லாம் தரைமட்டமாக்கியவர் என்று

குற்றம் சாட்டப்பட்டவர், கோயிலுக்கு அளித்த மான்யம் அது என்பதை அறிந்தபோது பேராச்சரியம் அடைந்தேன்.

இதுபற்றி ஒருமுடிவிற்கு வருவதற்கு முன்னர் பாரசீக மொழியில் பண்டிதராக விளங்கிய ஸர் தேஜ்பகதூர் சாப்ரூ வுடன் கலந்தாலோசித்தேன். அந்தப் பெரியவர் ஜகதாம்புரி ஷிவ் மந்திர் பற்றிய எல்லாப் பத்திரங்களையும் ஆராய்ந்து பார்த்து விட்டு அந்தக் கோயிலுக்கு, ஔரங்கஜேப் மன்னர் ஜாகீர் மான்யம் கொடுத்திருக்கிருர் என்று உறுதி செய்தார்.

இதைப் பற்றி நான் மேலும் ஆராய முற்பட்டபோது, ஒரு புதிய ஔரங்கஜேப் மன்னர் என் கண்முன் தோன்றிஞர்.

ஷிவ் சங்கர் மந்திருக்கு மட்டுமல்ல உஜ்ஜயினிலுள்ள மஹா கலேஸ்வரர் கோயில், சித்திரக் கூடத்திலுள்ள பாலாஜி கோயில், ஷத்ரன்ஜே ஜெயின் கோயில். கௌகத்திலுள்ள அம்பராநத் கோயில், மேலும் சீக்கியருக்குரிய பல குருத்து வாரக்கள் ஆகியவற்றிற்கு ஔரங்கஜேப் மன்னர் ஜாகீர்கள் வழங்கியிருப்பது தெரிய வந்தது.''

இந்துக்களின் பரம விரோதி என்று வெள்ளையர்களால் திட்டமிட்டுப் பிரச்சாரம் செய்யப்பட்டு அதுவே மெய்யென நம்பப்பட்ட ஔரங்கஜேப் மன்னர் இந்து ஆலயங்கட்கு அளித் துள்ள அறக்கட்டளைகளின் பட்டியலைத் தொகுத்துரைத்த பின் னரும் அவரைப் பற்றிய தப்புப் பிரச்சாரம் நடைபெறுவதை நிறுத்துவதில் உள்ள நன்மையை எண்ணிப் பார்த்திட வில்லை.

இதேபோன்ற பொய்யை மாமன்னர் திப்புசுல்தான் மீதும் கட்டிவிட்டிருக்கிருர்கள் என்பதையும் திருவாளர் பாண்டே M.P. விளக்கியுள்ளார். அதுமட்டுமின்றி சிவாஜி மன்னரிடம் முஸ்லிம் படைகளும் தளபதிகளும் இருந்ததையும் ஔரங்க ஜேப் பாதுஷாவிடம் இந்துக்களைக் கொண்ட பெரும்படை யும் தளபதிகளும் இருந்ததையும், திப்பு சுல்தானின் படை வீரர்களாக மட்டுமின்றி, அமைச்சர்களாகவும் தளபதிகளாக

வும் இருந்த உயர் ஜாதி இந்து (பிராமணர்கள்) பற்றியும் பட்டியலே தந்துள்ளார் பாண்டே எம். பி. அவர்கள்.

இங்கேயும் கூட நம்மிடையே வாழுகின்ற பொள்ளாச்சி மகாலிங்கம் என்கின்ற தொழில் அதிபர் திப்புவைப் பற்றியும் வடக்கில் ஆண்ட வேறுசில முஸ்லிம் மன்னர்களைப் பற்றியும் சில புதிய தகவலே எடுத்துரைத்துள்ளார்.

திருப்பனந்தாள் எனும் சிற்றூரில் உள்ள சைவ மடத்தின் ஸ்தாபகரான குமரகுருபர ஸ்வாமிகள் ஔரங்கஜேப் காலத்த வராவார். இவர் 'சகலகலாவல்லிமாலே' எனத் தமிழில் ஒரு சிறு தோத்திரமாலே பாடியுள்ளார். இந்த சரஸ்வதி தோத்திர நூல் அரங்கேற்றமானது டில்லியில் ஔரங்கஜேப் மாமன்னரின் அவையில் எனக் குமரகுருபரசுவாமி அவர்களின் வரலாற்றுக் குறிப்பு கூறுகின்றது.

அந்த நூலின் அரங்கேற்றம் நடந்ததின் விளைவாகக் காசியில் உள்ள குமரகுருபர சுவாமி மடத்திற்கு மடம் கட்டிக் கொள்ள இடமும் மடத்தின் நிர்வாகத்திற்கென பல ஏக்கர் நிலமும் ஔரங்கஜேப் பாதுஷாவால் மான்யம் வழங்கப் பட்டுள்ள செய்தியும் குமரகுருபரர் வரலாற்றில் உள்ளது.

ஆனாலும் திட்டமிட்டுச் சில படித்த இந்துக்களால் இந்து மதப் பெரியோர்களால், இஸ்லாம் வாள்கொண்டு இங்கு பரப் பப்பட்ட தென்றும், முஸ்லிம் மன்னர்களால் இந்து ஆலயங்கள் இடிக்கப்பட்டன வென்றும் பிரச்சாரம் செய்யப்படுகின்றது.

இந்து—முஸ்லிம்களிடையே பகையை வளர்த்து விட்டு அந்தப் பகையைத் தங்கட்குச் சாதகமாக ஆக்கிக் கொண்டு இந்தியாவை ஆண்டிருந்தனர் வெள்ளேயர். அவர்கள் மூட்டி விட்ட இந்த பகையெனும் தீ அவிந்தாலன்றி இந்தியா வாழ வழியில்லே என்பதைச் சுதந்திரப் போராட்ட காலத் தலேவர்கள் உணர்ந்தே இருந்தார்கள். இதோ, இந்தியப் போராட்ட

காலத்துத் தலைவர்களில் ஒருவரான ஆச்சாரிய கிருபளானி கூறுகின்றார் :

''...ஒரு முஸ்லிமை வேற்றுமனிதனாக நினைக்கும் ஒரு இந்து இந்தியாவின் சுதந்திரத்திற்கும் முன்னேற்றத்திற்கும் பகைவனாகின்றான். இவ்வாறே ஒரு முஸ்லிம் ஒரு இந்துவைப் பற்றி நினைத்தால் அவனும் நாட்டிற்கும் நாட்டு மக்களுக்கும் கேடு விளைவித்தவனாகின்றான்...''

இப்படி ஆச்சாரிய கிருபளானி அன்று சொன்னார். அவர் மட்டிலுமன்று; சுதந்திரத்திற்கு முன்னம் பீகார் மாநிலத்தில் பெருமளவில் முஸ்லிம்கள் கொல்லப்பட்டபோது அதை வெள்ளையராட்சி வேடிக்கை பார்த்திருந்ததை அறிந்த நேருஜி, பாட்னா நகர் சென்று மக்களைக் கூட்டிவைத்து ''இனியொரு முஸ்லிமைக் கொல்வதாயின் என்னை முதலில் கொன்று எனது சவத்தின் மீது ஏறிச் சென்று முஸ்லிம்களைச் கொல்லுங்கள்'' எனப் பகர்ந்தார்- அவ்வுரை மக்களின் மனத்தைக் கவ்விப் பற்றிற்று. தங்களின் தீச்செயலை அக்கணமே விட்டொழித்தனர். ஆனால் இன்று யாரிருக்கின்றார்கள் அவ்வாறுரைத்து நாட்டில் முஸ்லிம்கட்கு எதிரிடையாக நடைபெறுகின்ற அராஜகத்தை அகற்றிட ?

வெள்ளைக்காரன் கட்டிவிட்ட கதைகள் பொய்யானவை என எத்தனையோ தலைவர்கள் அக்காலை எடுத்தியம்பினார்கள். ''இஸ்லாம் இந்து மதத்திக்கு விரோதமானதன்று'' என விளக்கியும் உரைத்தார்கள். அவையெல்லாம் இன்று மறைக்கப்பட்டுவிட்டன.

இந்திய அரசியல் வானில் சுடர்விட்டுப் பிரகாசித்த மாமணிகளில் ஒன்றெனத் திகழ்பவர் எம். என். ராய். வங்காளி இந்துவான இவர் ரஷ்யப் புரட்சியின் போது ஸ்டாலின், ட்ராட்ஸ்கி போன்ற தலைவர்களின் உற்ற நண்பராயிருந்தது மட்டுமின்றி அவர்களுடன் ஒன்றிணைந்து நின்று ரஷ்யப்புரட்சியின் வெற்றிக்கு உழைத்தவரும் ஆவார். நல்ல சிந்தனாவாதி. இவருடைய சிந்தனையை-தத்துவத்தை ''ராய்-

இசம்'' என்பார்கள். நல்ல எழுத்தாளர் பல நன்நூற்களைப் படைத்தளித்துள்ளார். இவர் எழுதுகின்ருர்.

''புத்தமத வீழ்ச்சிக்குப் பின்னர் இந்தியாவில் சமூக அரசியல் நிலைகள் சீர்கேடுற்று விட்டன. இஸ்லாம் ஓர் எளிமையான சாதனமாயிருந்தது, ஆகையால் பொதுமக்கள் தாங்களாகவே அதன்பால் ஈர்க்கப்பட்டு அதில் சேர்ந்து கொண்டனர்...''

...''இஸ்லாத்தின் சரித்திரச் சாதனைகள்''
எம். என். ராய் எழுதிய நூல்

திரு. எம். என். ராய் அவர்கள் இஸ்லாம் இந்து மக்களைக் கவர்ந்த விதம்பற்றி மிக விரிவாகவே இந்நூலில் எழுதியுள்ளார். ''இங்குள்ள வருணாச்சிரம தர்மம் என்கின்ற ஆரியக் கோட்பாடுகள் மக்களைத் தீண்டாதவர்களாகவும் தாழ்ந்தவர்களாகவும் சமூகத்தில் சரிசம அந்தஸ்துப் பெறுவதற்குத் தகுதியற்றவர்களாகவும் ஆக்கி விட்டிருந்தது. மனிதர் யாவரும் சமமே என்கின்ற ஏற்றத் தாழ்வுகளற்ற சாதிப் பிரிவுகளற்ற தன்மையுடையதாக-நடைமுறைக்கு ஏற்றதாக இஸ்லாம் இலங்குகிறது. எனவே மக்கள் அதில் அழைப்பாரின்றியே சென்று சேர்ந்து கொண்டனர்'' என்கிருர். அதுமட்டுமின்றி இஸ்லாமியப் பேரரசின் காலத்தே தோன்றிய இந்தியாவின் முன்னேற்றங்களை யெல்லாம் வியந்துரைக்கின்ருர். இஸ்லாமியப் பேரரசு உண்மையான இந்துமதத் தத்துவங்கட்டு மாருன செயல் எதையும் செய்திடவில்லை எனவும் விளக்கி உரைக்கின்ருர். ஆனல் அந்த அரிய நூலினைப் படிக்கவே இந்துக்கள் மறுத்தார்கள். ராயைத் தங்களின் பகைவர் எனக் கருதிடவும் தவறிடவில்லை.

அக்பர் பாதுஷா காலத்தில் தொடங்கி ஷாஹ்ஜஹான் காலத்தில் விரிந்து ஔரங்கஜேப் ஆலம்கீர் ஆட்சியின் தொடக்கத்தின் பன்னிரண்டாண்டுக் காலம் வரை முஸ்லிம்களின் ஆட்சிக் காலத்திலேயே முஸ்லிம்கட்கு எதிரான செயல்கள் நமது சகோதரர்களான இந்துக்கள் சிலரால்

செய்யப்பட்டதைப் படிக்கும் எவரும்—ஏன் நடுநிலை மன முடைய இந்துக்கள் கூடக் கண்ணீர் வடித்திடாதிருந்திட வியலாது.

இஸ்லாமியப் பெண்களைக் கடத்திச் செல்லல், பள்ளி வாசல்களை இடித்தல், பிள்ளைகளைக் கடத்தி யேகி இந்துவாகக் கட்டாய மதம் மாற்றல்...

சரித்திரம் விரித்துரைக்கின்ற மிகக் கொடிய இப்பகுதிகளை மேலே குறிப்பிட்ட மூன்று மாமன்னர்களின் ஆட்சி காலத்தின் உண்மை வரலாற்றினைப் படித்தோர் அறிவர்.

அக்பர் பாதுஷா இத் தீச்செயலை அடக்கிட, அவர் கால அதிகாரிகள் அவர் செவிகளில் இச்செயல் செய்திகளை எட்டிட விட்டாரில்லை என அறிய முடிகின்றது.

ஷாஹ்ஜஹானால் அடக்க முயன்றும் முடியாதாயிற்று. ஔரங்கஜேப் ஆலம்கீர் இக்கொடிய செயலினைத் தனது ஆட்சி துவங்கிய பன்னிரண்டாண்டிற்கு மேலும் விட்டிருக்க விருப்பிடவில்லை.

"முஸ்லிம்களின் சொத்து, சுகம், கலை, கலாச்சாரம், பள்ளிவாசல்கள், பள்ளிக்கூடங்கள் (மதரஸாக்கள்), பெண்கள், பிள்ளைகள் ஆகியவற்றுள் எது ஒன்றிற்கும் இதர மார்க்கத் தினரால் கேடு நேரலாகாது. அஃதே போன்று, இதர சமயத் தாருடைய உடைமை, கலை, கலாச்சாரம், பெண்கள், பிள்ளைகள், ஆலயங்கள், அறநிலையங்கள், வேத பாடசாலைகள் ஆகியவற்றிற்கு முஸ்லிம்களாலும் கேடு நேரலாகாது" என அறிக்கை வெளியிட்டார்.

ஔரங்கஸேப் மாமன்னர் ஆட்சி காலத்தில்தான்

இந்தியாவில் முதன் முதலில் அரசாங்கம் கெசட் வெளியிடு கின்ற வழக்கம் ஆரம்பமாயிற்று. அந்த கெசட்டுகளில் மேலே கண்ட அறிக்கை வெளியிடப்பட்டது. அக்கெசட்டின் அறிவிப்பை நகர—கிராம அதிகாரிகளைக் கொண்டு மக்களுக்கு அறிவிப்புச் செய்ய வகை செய்யப்பட்டது.

இந்த அறிவிப்பு பற்றி ஔரங்கஜேப் மாமன்னர் தந்துள்ள விளக்கம் காசிமாநகர் ஆலயத்திற்கு அவர் அளித்துள்ள அறக் கட்டளை ஒன்றின் அடியில் குறிக்கப்பட்டுள்ளது அவர் தம் உத்திரவுப்படி. அவ்வாசகமாவது—:

''பிற சமயத்தாரின் வணக்கத் தலங்களைப் பாதுகாப்பதில் உயிர்த் தியாகம் புரிந்திடவும் முஸ்லிம் தயாராக இருக்க வேண்டும் என்பது இறைவனின் கட்டளை...''

''மற்ற சமயத்தாரின் ஆலயங்களையும் பராமரிப்பதற்காக முஸ்லிம் மன்னர்கள் உதவிட வேண்டும்...''

காசி ஆலயத்திற்கு ஔரங்கஜேப் மாமன்னர் வழங்கியுள்ள அறக்கட்டளையின் அடியில் குறிக்கப்பட்டுள்ள இவ்வரிய குறிப்பினையொப்ப ஒரு குறிப்பினை உலகில் தோன்றிய இஸ்லாம் அல்லாத எச்சமயம் சார்ந்த மன்னரும் வெளியிட்டுள்ளதாக அறிந்திட இயலவில்லை. ஆனால், இத்தகு உயரிய பண்பாடுடைய நடுநிலை தவரு மாமன்னரான அவரைத்தான் ''இந்து ஆலயங்களை இடித்தவர்'' எனப் பொய்ப் பிரச்சாரம் செய்து அதையே உண்மையெனப் பாமரமக்களை மட்டுமின்றிப் படித்த மக்களையும் நம்பவைத்துள்ளது, வல்லமை மிக்க வெள்ளையர் ஆட்சி! ''பொய்யுடையொருவன் சொல்வன்மையினால் மெய் போலும்மே, மெய் போலும்மே'' என்பது முது மொழியல்லவா?

தனது குடிபடைகளிடத்தே சமய பேதம் காட்டாமல் நடுநிலையோடு நடந்து கொண்டவர் ஔரங்கஜேப் மாமன்னர். இவ்வாறு அவர் நடந்து கொள்ள அவரைப் பக்குவப் படுத்தியது அவர் கற்றிருந்த திருக்குர்ஆன் எனும் மாமறையின் வாசகங்களே என்பது மெய்மையினும் மெய்மையாம். ஆம், திருக்குர்ஆன் தந்துள்ள செவ்விய வாசகங்களுள் ஒன்று:—

''உங்கள் வழி உங்களுக்கு எம் வழி எமக்கு...'' என்கின்ற கருத்துடையதாகும். இவ்வரிய வாசகத்தை நினைவு படுத்துவதே, நினைவு கூர்த்துவதே காசி ஆலயத்திற்குத்

திாமளித்த அறக்கட்டளையின் அடியில் 'ஆலம்கீர்' குறிக்கச் செய்துள்ள அரிய வாசகம்,

''இந்து மன்னர் சிவாஜி, முஸ்லிம்களுக்குப் பெரிய பொறுப்புகளை நிர்வகிக்கக் கொடுத்தார்.''

''முஸ்லிம் மன்னர் ஔரங்கஜேப் இந்துக்களுக்குப் பெரிய பெரிய நிர்வாகப் பொறுப்புகளைக் கொடுத்தார்.!''

ஆனல்—

இந்துக்களையும் முஸ்லிம்களையும் வேறுபடுத்தி விஷத்தைத் தூவி தன் ஆட்சியை நிலைநிறுத்த வெள்ளையர்கள் சூழ்ச்சி செய்து-அதில் வெற்றியும் பெற்றனர். அது இந்த தலைமுறையிலும் தொடரலாமா?

மதத்தைப் பரப்புவதற்கான அமைப்புகள் கிறித்துவர்க்கு இருக்கிறதென்ருல், பண்டைய வட இந்தியாவில் இந்த முறை இயங்கிய வரலாறு உண்டு. ஆம், இந்திய எல்லையைக் கடந்து பாரசீகம் (ஈரான்), ஈராக் வரையிலுய் புத்தமதம் பரவிட வழிவகுத்தவன் அசோக மன்னன். அங்கு மட்டிலுமன்று சீனு, ஜப்பான், பர்மா போன்ற நாடுகளிலெல்லாம் புத்த மதம் பரவிட வழி கண்டவனும் அவனே. அவன் ஆட்சிக்கு உட்பட்டிருந்த பகுதிகள் அனைத்திலும் புத்த மதத்தைப் பரப்பிட அவன் தவறிடவில்லை. மன்னன் மதம் எதுவோ அதுவே மக்களின் மதமாகவும் இருந்த நெடிய வரலாறு பண்டைய இந்தியாவில் மட்டுமின்றி ஏனைய நாடுகளிலும் இருந்து வந்ததென்பதே வரலாறு. பண்டையத் தமிழகமும் இதற்கு விதிவிலக்கன்று.

ஐரோப்பா கண்டத்தில் வெஸ்ட் பாலியா (WEST PHALIA) உடன்படிக்கை ஏற்படும் வரையில் (கி. பி. 648) மன்னன் மதம் எதுவோ அதுவே மக்கள் மதமாகவும் இருந்து வந்ததாக வரலாறு. இங்கிலாந்தில் எலிசபெத் ராணி காலத்தில் ப்ராடஸ்தந்து மதம் அயர்லாந்து மக்கள் மீது பலவந்தமாகத் திணிக்கப்பட்டது.

இஸ்லாம் இவ்வழிக்கு மாறுபட்டது என்பதை நாம் குறிக்க வேண்டியதில்லை. ''இஸ்லாமிய அரசு துவங்கிய நாடுகளில் வாழ்ந்த இதர மதத்தாரின் மீது தலைவரி (ஜிஸ்யா) விதிக்கப்பட்டது'' என பிறசமய வரலாற்ருளர்கள் குறிப்பதே இதற்குச் சான்ருகும். அதாவது இதர மதத்தினர்கள் இஸ்லாமிய அரசின் கீழ் மத உரிமையுடன் வாழ்ந்திருந்தனர் என்பதற்கு ''தலைவரித் தாக்கு' எழுத்துக்களே சான்ருகின்ற தென்பதாம். இதுபற்றி ஒரு நிகழ்ச்சி:

கி.பி ஏழாம் நூற்ருண்டில், அதாவது ஹலரத் உமறிப்னுகத்தாப் (ரலி) கிலாபத்தின் போது அவர் ஆளுகையின் கீழ் ஆசியாமைனர்ப் பகுதி வந்தது. அங்கு ஒரு இஸ்லாமிய ஆளுநர் இருந்து அப்பகுதியை நிர்வகித்து வந்தார். தலைநகரில் அங்கு வாழ்ந்த கிறித்துவர்கள் ஏசுநாதர் சிலை ஒன்றினை நிறுவியிருந்தனர். அச்சிலையின் மூக்கினை யாரோ ஒருவன் ஒரு நாள் நள்ளிரவில் சேதப் படுத்திவிட்டான். கிறித்துவர்கள் ஆளுநரிடம் முறையிட்டனர். அவர் நட்டயீடு தருவதாகவும் வேறு சிலை நிறுவிக்கொள்ளுமாறும் கூறினுர். கிறித்துவர்கள் சம்மதிக்கவில்லை. சிலையின் மூக்கைச் சேதப்படுத்தியவனின் மூக்கை அரிந்திட வேண்டும் என வலியுறுத்தினர். ஆளுநர் ஒப்புக் கொண்டார். என்ன முயன்றும் சிலையின் மூக்கினைச் சேதப்படுத்தியோனைக் கண்டு பிடித்திட இயலவில்லை. ஆளுநர் கிறித்துவப் பாதிரிமார்களை அழைத்துப் பேசினுர். குற்றவாளியைக் கண்டு பிடித்திட இயலவில்லை என்ருர். அவர்கள் வேறு எந்த விதத்திலும் சமாதானம் ஆகிவிடவில்லை. இந்த நிலையை விளக்கி ஆளுநர் மதினுமாநகருக்கு-கலீபா உமறுப்னு கத்தாப் (ரலி) அவர்கட்கு எழுதினுர். அங்கிருந்து தாமதமின்றி உடன் பதில் வந்தது. பதில்:-

''குற்றவாளியைக் கண்டுபிடித்து அவன் மூக்கை அரிந்திட வேண்டியது ஆளுநரின் கடமை! தவறினுல், குற்றவாளியைக் கண்டு பிடித்திட இயல வில்லை என்ருல் ஆளுநரே

பொதுமக்கள் முன்னிலையில் தனது மூக்கினை அரிந்து கொள்ள வேண்டிய'து"

எனக் கண்டிருந்தது. குற்றவாளி முன்னிலும் அதிக அக்கறையுடன் தேடப்பட்டான். கிட்டிட வில்லை. எனவே ''குற்றவாளிக்குப் பதிலாக ஆளுநரே தனது மூக்கினை இன்ன இடத்தில், இந்த நேரத்தில் அரிந்து கொள்வார்" என நகர் முற்றிலும் அறிவிப்புச் செய்யப்பட்டது.

குறித்த நாளில் குறித்த இடத்திற்கு ஆளுநர் வந்தார். அவர் வந்திடற்கு முன்னரே மக்கள் வெள்ளம் திரண்டிருந்தது.

மேடையின் மீது ஏறி, தனது உடை வாளினை எடுத்து ஆளுநர் தனது மூக்கினை அரிந்து கொள்ளத் தயாரானர்.

அதுபோது கூட்டத்தை விலக்கிக் கொண்டு ஒருவன் ஆளுநர் அருகே வந்தான். அவன் கண்கள் கண்ணீரை வடித்துக் கொண்டிருந்தன.

''ஆளுநர் அவர்களே! நான் தான் அச்சிலையின் மூக்கினைச் சிதைத்தவன். தங்கள் மூக்கை அரிந்திட வேண்டாம். என் மூக்கை அரிந்திடுங்கள்" எனக் கூறினன்.

மேடை மீது தனதருகே கண்ணீர் மல்கி நின்ற அவன் தன் மூக்கினை அரிந்திடத் தனது வாளை அவன்பால் கொண்டேகினர் ஆளுநர். அருகே வீற்றிருந்த பாதிரிமார்கள் எழுந்தனர். ''ஆளுநர் அவர்களே, உங்களுடைய நீதி குற்றவாளியைத் திருத்தி இருக்கிறது. அவன் தன் குற்றத்தை ஒப்புக் கொண்டு, தண்டனையையும் ஏற்றுக் கொள்ளுமாறு செய்துள்ளது. எனவே உங்கள் (இஸ்லாமிய) ஆட்சியை அதனுடைய சமநீதித் தன்மையை உணர்ந்த நாங்கள் குற்றவாளியை மன்னிக்கிறோம். எங்கள் சிலையை முன்போன்று செப்பன் செய்து தருதலே போதும்" எனப் புகன்றனர்.

இந்த நிகழ்வு இஸ்லாமிய ஆட்சியின் கீழ் இதர மார்க்கத்தினரும் பூரண மத உரிமையுடன் வாழ்ந்ததைத் தெளிவு படுத்தப் போதுமானதாயுள்ளது. இதுபோன்ற எத்தனையோ நிகழ்வுகள்.

''இஸ்லாத்தை ஏற்பதில் கட்டாயமில்லை'' என்கின்றது குர்ஆன் வாசகம். அவ்வாசகத்தை மெய்யாக்கிக் காட்டுவதே— காட்டியதே இஸ்லாமிய ஆட்சி. இந்தியாவிலும் இந்தமுறை முற்றிலுமாகக் கடைப் பிடிக்கப்பட்டுள்ள தென்பதே வரலாறு.

ஆனால் நம்மை இருநூருண்டாக ஆண்டு ருசிகண்ட வெள்ளையர், இந்துக்களையும் முஸ்லிம்களையும் பிளவுபடுத்தி அவர்கட்கு இடையேயுள்ள ஒற்றுமையைச் சிதைத்தாலன்றி இந்த நாட்டை ஆளமுடியாதெனக் கண்டனர். எனவே கடைசி வரை இந்து—முஸ்லிம்களைப் பிளவுபடுத்துவதையே வேலையாகக் கொண்டனர். அவர்கள் எண்ணத்தில் செயலில் வெற்றியும் கண்டனர். அவர்களின் செயல்தான், பிற மத சுதந்திரத்தையும் பாதுகாத்தலே மன்னராகிய தனது கடமை என வாழ்ந்த ஔரங்கஜேப் மாமன்னரையே இந்துக்களின் பரம விரோதி என எழுதவைத்தது. ''ஒரு பொய்யை திரும்பத் திரும்பச்சொன்னால் அதுவே மெய்யாகிவிடுகிறது'' என்கின்ற தத்துவப்படி வெள்ளையர்கள் தாங்கள் எழுதியதோடன்றி தங்கள் தயவினை எதிர் பார்க்கின்ற இந்திய வரலாற்ருசிரியர்களையும் கொண்டு எழுதப் பணிந்துள்ளனர்.

இந்து மக்களும் மதித்துப் போற்றுகின்ற மாமன்னர்களாக விளங்கிய முஸ்லிம் மன்னர்களைத் தாங்கள் ஒழித்துக் கட்டியது சரியே என இந்தியாவின் பெரும்பான்மை மக்களாகிய இந்துக்களை நம்பவைத்தால் அவர்கள் ஆதரவைக் கொண்டே இந்தியாவை என்றென்றும் ஆண்டு விடமுடியும் என்கின்ற நினைப்பில் வெள்ளையர் வேண்டுமென்றே கட்டிவிட்ட கதைகளேயன்றி உண்மையில் இஸ்லாமியமோ இஸ்லாமியப் பேரரசர்களோ இந்துக்களுக்கோ இந்து சமயத்திற்கோ பகையாக இல்லை. இந்துக்களிடம் மட்டுமின்றி ஏனைய எந்த ஒரு சமயத்திற்கும் பகையானதுதன்று இஸ்லாம். அவரவர் கொள்கை அவர

வர்க்கெக் கொண்டு, யாவரும் ஒற்றுமையாகப் பகைப் பின்றி வாழவேண்டும் என்பதே இஸ்லாமியத்தின் அடிப் படைக் கொள்கை. இந்தியாவை ஆண்ட எல்லா முஸ்லிம் மன்னர்களுமே இந்த நெறி நிறைவேற்றியவரேயாவர். இது மீண்டும் இந்தியர் அனைவரும் நினைவில் கொள்ளத்தக்கது. இங்கு ஆட்சி புரிந்த முஸ்லிம் மன்னர்களில் யார் ஒருவரும் இந்துக்களுக்கு விரோதமான செயலைச் செய்ததில்லை என்ப தொப்ப—இந்து மன்னர்களும் இஸ்லாமியர்கட்கு விரோதி யாக இருந்திடவில்லை.

''இந்த நாளில் ஔரங்கஜேப் கசப்பான முறையில் விமர்சிக்கப்படுகிறார். ஆங்கில வரலாற்றாசிரியர்கள் அவர் மீது ''இந்துக்களின் பகைவர்'' எனும் முத்திரையைப் பதித்து விட்டனர். ஆனால் அது உண்மைக்குப் புறம்பானது. ஔரங்கஜேப் ஆட்சியில் ஹிந்துக்களுக்கு மன்ஸப், ஜாகீர், ஜமீன்தார் ஆகிய பதவிகள் கொடுக்கப்மட்டன. ஔரங்க ஜேப் ஹிந்துக்களை கவர்னர் ஆகவும் கவர்னர் ஜெனரலாகவும் வைஸ்ராயாகவும், சேனைத் தளபதிகளாகவும் தலைமைச் சேனாதிபதியாகவும் நியமித்தார். ஆப்கானிஸ்தான் எனும் ஒரு முஸ்லிம் நாட்டை ஒரு ஹிந்து ராஜபுத்திர வைஸ்ராயின் கீழ் ஆட்சி நடத்த வைத்தார். அவர் சிவாஜியுடன் புரிந்த போர், மத அடிப்படையில் நடந்ததல்ல. முழுக்க முழுக்க அரசியல் காரணமேயாகும்''

இவ்வாருக 5-10-75 ம் தேசிய'' இல்லஸ்ட்ரேடட்' எனும் பிரபல ஆங்கில வார ஏட்டில் ஆச்சாரியா பிரபுல்ல சந்திர ராய் என்னும் பிரபல தேசியத் தலைவர் குறிக்கின்றார். ஆனால் நமது நாட்டிலுள்ள இந்திய மொழிப் பத்திரிகைகளில் இது போன்ற செய்திகள் அதிகம் இடம் பெறுவதில்லை. தலைமுறை மாறிவருகிறது. முந்திய கற்பனைப் புனைந்துரைப் பொய்களை இக்கால இளைஞர்கள் ஏற்கத் தயாரில்லை என்பதை இவ்விதழ் களின் ஆசிரியர்களோ கட்டுரையாளர்களோ அறிந்திருக்க

வில்லை. நாடு விடுதலை பெற்று மொழி வழியாக மாநிலங்கள் திருத்தி அமைக்கப்பட பிறகு தங்கள் தங்கள் மாநிலங்களில் தோன்றிய தேசியத் தலைவர்கள் பற்றிய ஆராய்ச்சியும் போற்றுதலும் துவங்கியுள்ளது. கேரளத்தில் குஞ்சாலி மரைக்காயர் சாதிமத பேதமின்றித் தேசியத் தலைவராக ஒப்புக் கொள்ளப் படுகிறார். இவரைக் ''கொள்ளையன், கொலை காரன், இந்து மன்னனின் பகைவன்'' என்றெல்லாம் வெள்ளையரரசு வருணித்தெழுதியுள்ளது. இதே போன்று,

கன்னட நாட்டில் திப்புசுல்தான் கன்னட நாட்டின் தேசியத் தலைவராக அம்மாநிலத்தின் மக்கள் அனைவராலும் ஒப்புக்கொள்ளப் பட்டுள்ளார். திப்புசுல்தானுக்கு நினைவுச் சின்னம் அமைப்பதிலும் அவர் பற்றிச் செய்திப் படம் தயாரிப் பதிலும் கன்னட நாட்டரசு முனைப்பாகி உளது. ஆனால் அவரைப் பற்றித்தான் எத்தனையெத்தனை அவதூறுக் கற்பனைக் கதைகள்..?

'மழைவிட்டும் துவானம் விடவில்லை' என்பதையொப்ப வெள்ளையராட்சி வெளியேறிய பின்பும் அவர்கள் சிருஷ்டித்து விட்டுச்சென்ற ''இஸ்லாம் இந்து மதத்திற்கு விரோதமானது' என்கின்ற 'பூதம்' அகன்றபாடில்லை; அகற்றுவதிலும் நம் அரசாங்கம் போதிய கவனம் செலுத்துவதாயில்லை, செலுத் திட வேண்டும்.

அரசியல், சமூகம், இலக்கியம், கலை, வரலாறு, சமயங்கள் போன்ற எதிலுமே கடந்த இரு நூற்றாண்டுகளாக உண்மையை அறிந்திடும் வாய்ப்பு மக்களுக்கு ஏற்பட்டிருக்கவில்லை. பொய் யும் புனைந்துரைகளுமே பரப்பப்பட்டுள்ளன. இதன் காரண மாக இந்நாட்டிற்கு உரியவர்களாகவுள்ள மிகப்பெரிய இரு சமயத்தினரிடையே பகையுணர்வு வளர்ந்துவரக் காண்கிறோம்.

அன்னியன் ஆட்சி அகன்ற பிறகேனும் இந்த நிலையில் மாற்றம் ஏற்படும் என எண்ணினோம். ஏற்படுத்திட வேண்டு

மென்றே அன்றையத் தலைவர்கள் விரும்பினார்கள். அவர்களின் அந்தப் பயனுடைய விருப்பம் வெறும் பேச்சோடும் எழுத்தோடும் நின்று விட்டது. செயல் வடிவம் பெற்றிடவில்லை. இன்றுள்ளோர்கள் இதன் விளைவு என்ன ஆகிடும் என்பதையே எண்ணிப்பார்த்திடுவதாகத் தெரியவில்லை. ஒற்றுமையை வளர்த்திடும் தன்மையில் எழுதுவோரைக் காணோம்! பகையுணர்வைத் தூண்டுகின்ற பேச்சும் செயலும் பெருகி நாளுக்கு நாள் விரிவடைவதையே பார்க்க முடிகின்றது.

'இந்தியாவில் இஸ்லாம் பரவியது வாளால் அன்று, ஞானவான்களின் நல்லுரைகளால் தான்' எனக் காந்திஜீயின் நண்பர் சுந்தர்லால் எழுதியுள்ளதை எடுத்துச் சொல்வோர் இல்லை. புத்தமத வீழ்ச்சிக்குப் பிறகு, மக்களிடம் அன்பு, அறம், எளிமை, பொருளாதாரச் சுபிட்சம் போன்றவை மறைந்து, சனாதன தர்மம் ஓங்கியதால் பாதிப்பிற்குள்ளான மக்கள் இஸ்லாத்தை நாடிச் செல்லலாயினர்" என்று எம். என். ராய் உரைத்திருப்பதை ஊன்றிக் கவனித்தாரில்லை.

நல்லதைப் பேச வேண்டிய நாவுகள் நஞ்சை உகுக்கின்றன.

ஒற்றுமையை உபதேசிக்க வேண்டியவர்கள் பகையை வளர்த்திடத் தலைப்பட்டு விட்டார்கள்.

நாடென்பது நாட்டு மக்கள் அனைவருக்கும் உரியதெனும் உண்மையை ஒதுக்கித் தள்ளிவிட்டனர்.

''இது நமது நாடு'' என்பது போய், ''எமது நாடு'' என இயம்பிடத் தொடங்கி விட்டனர்.

ஒன்றாயிருந்த குடும்பம் இரண்டாகப் பிரிந்து விட்டாலும் 'இரண்டு குடும்பத்தவரும் என் மக்களே எனும் தந்தை உணர்வு காந்திஜீக்கு இருந்தது. அதனால் 'இரு குடும்ப வாழ்க்கையும் மேன்படும்; மேன்பட வேண்டும்' என்கிற எண்ணம் அந்த அண்ணலுக்கு இருந்தது. இன்றுள்ளோருக்கு?...

சிவ வண்ணக்கத்தினருக்கும் சக்தி வணக்கத்தினருக்கும் இடையில் மூண்ட, யார் பெரியவர் என்ற சண்டை, ஆப்கானிஸ்தானத்தின் அதிபதியான கஸ்னவி (கஜ்னி) முகம்மதை இங்கே இட்டு வந்தது என்பதை அறிந்திருந்தால் பகை உணர்வைத் தூண்டுவோர் நம்மிடையே தோன்றிட முடியுமா? கே. எம். முன்ஷி அவர்கள் எழுதியுள்ள ''ஜெய் சோமநாத்'' எனும் நூலினைப் படித்தால் தெரியுமே, உண்மை எது? என்று. கஜ்னி முகம்மதின் சிறப்பியல்புகளை, மனிதத் தன்மையைப் பண்பாட்டுணர்வை எடுத்தியம்பும் கே. எம். முன்ஷியின் எழுத்தைப் படிப்போர் வியப்படைந்திடாதிருக்க இயலுமா? முன்ஷி இந்து அல்லவா? உண்மை உரைப்பதை மதம் தடுப்பதில்லை என்பதற்கு முன்ஷி ஓர் எடுத்துக்காட்டு.

தன் நாட்டு எழுத்தாளரான அல்பைரூனியைச் சமஸ்கிருதம் படித்திட வைத்து, அவரைக் கொண்டு இந்தியத் தத்துவங்களை, வேத சாத்திரங்களை, உபநிஷத்துக்களை, பகவத் கீதையைப் பாரசீக மொழியில் எழுதச் செய்தார் கஜ்னி முகம்மது. அல்பைரூனி எழுதிய ''கிதாபுல்ஹிந்த்'' எனும் நூலின் வாயிலாகத்தான் முதன் முதலில் இந்தியத் தத்துவங்கள் உலகெங்கிலும் பரவிற்று என்பது இங்குள்ளோருக்குத் தெரியாதிருக்கலாம். ஆனால் வெள்ளைக்காரர்கட்கு நன்கு தெரியும். இந்த உண்மை வரலாறு இங்கே பரவினால் இந்தியாவை நாம் ஆளமுடியாது என்பதும் அவர்கட்குப் புரியும். எனவே சோமநாதபுர அழிவிற்குக் காரணமாக இருந்தவர்களை விட்டுவிட்டு, அதற்கு ஆயுதமாகப் பயன்பட்ட கஜ்னியை ''இந்துக்களின் கோயிலை—சிலையை—அழித்தவன்; உடைத்தவன்'' என்று எழுதினான்; பரப்பினான்; யாவரையும் நம்பவைத்தான். அதன்மூலம் இந்தியாவை அடிமைப்படுத்தி இருநூறாண்டுகள் ஆண்டான் வெள்ளையன். இனியேனும் கஜ்னி என்பவர் யார் என்பதை அறிந்திட, அவரின் உண்மை வரலாற்றைப் படிப்போமா? இயலாவிட்டால் முன்ஷி எழுதியுள்ள 'ஜெய் சோமநாத்'தையேனும் தொடுவோமா?

## முஸ்லிம் இந்தியா!

தமிழ் வேந்தன் ராஜ ராஜ சோழனால் இந்த நாட்டினரின் வீரத்தைக் கீழ்த்திசை நாடுகள் அறிந்தன.

அசோக மன்னனால் புத்தமதம் மேற்கில் ஈரான்—ஈராக் வரை பரவிற்று! கிழக்கில் சீனா முதல் ஜப்பான் வரையிலும் விரிவுற்றது. இங்கே ஆட்சி புரிந்த இஸ்லாமியர்களின் ஆட்சிப் பரப்பு சோவியத் நாட்டிலுள்ள புகாரா வரைக்கும் விரிவுற்றது!

வீரத்திற்குப் பெருமை சேர்த்தான் தமிழ் மன்னன்!

மதத்திற்குப் பெருமை கண்டான் பேரரசன் அசோகன்!

இந்தியாவின் எல்லையை விரிவாக்கினார்கள் இங்கே ஆண்ட முஸ்லிம் மன்னர்கள்!

கஜ்னி முகமது படையெடுத்ததைப் படித்தவர்கள், அந்தக் கஜ்னி முகம்மதின் நாட்டையும் இந்தியாவுடன் இணைத்து அதற்கப்பால் உள்ள முஸ்லிம் நாடுகளையும் வென்று இந்தியாவின் ஆதிபத்தியத்தை எல்லையை விரிவாக்கி ஆட்சி புரிந்த முஸ்லிம் பேரரசர்களை பற்றிப் படித்துப் புரிந்து போற்றியதுண்டா?

ஔரங்கஜேப் மாமன்னரின் தந்தையான ஷாஜஹான் ஆட்சிக்காலத்தில் அவர், மத்திய ஆசியாவில் உள்ள பதக்ஷான், புகாரா ஆகிய பிரதேசங்களை வென்று தன்கீழ்க் கொண்டுவர விரும்பினார். அன்று இளவரசராக இருந்த ஔரங்கஜேப் தலைமையில் படை புறப்பட்டுச் சென்றது. அவருடைய இரு சகோதரர்கள் உடன் சென்றனர்.

போர், கடுமையாக நடந்து கொண்டிருந்தது. தொழுகைக்கான நேரம் வந்தது. அந்தப் போர்க்களத்திலேயே-போர் நடந்துக் கொண்டிருந்த நிலையிலேயே தொழுதிடத் தொடங்கினார் ஔரங்கஜேப். அக்காட்சியைக் கண்ட அந் நாட்டினை ஆண்டிருந்த சுல்தான் (முஸ்லிம் மன்னன்) இவரை

வெல்லுதல்தல் அரிதென அறிந்து சரண் ஆனான். போர், இந்தியாவிற்கு வெற்றியை அளித்தது.

ஷாஜஹான் மட்டுமல்ல, மாமன்னன் பாபரும், தனது மூதாதையர்களில் நாடாகிய மத்திய ஆசிய பகுதிகளைப் போரிட்டு வென்று இந்தியாவுடன் இணைத்தவர் என்பதே வரலாறு.

'பட்டாண்' இனத்து முஸ்லிம்கள் இங்கே ஆண்டார்கள். ஆனால் அவர்கள் நாட்டுடன் இந்தியா இணைந்திடவில்லை. இந்தியாவின் கீழ்த்தான் அவர்கள் நாடு இருந்தது.

பாரசீக முஸ்லிம்கள் இங்கே ஆண்டார்கள். ஆனால் பாரசீகத்திற்கு இந்தியாவை அவர்கள் அடிமைப்படுத்திடவில்லை.

துருக்கியர்களும் கூட ஆண்டார்கள். ஆனால் அவர்கள் நாட்டின்கீழ் இந்தியாவைக் கொண்டுபோய்விடவில்லை.

இஸ்லாமியப் பேரரசு இருந்த சுவடே தெரியாமல் விழுங்கிப் பூதாகாரமாக எழுந்தது மராத்தியப் பேரரசு. டில்லி பாதுஷா மராத்தியரின் கைப்பொம்மையாக அதிகாரமற்று அடக்கப்பட்டுக் கிடந்தார். மராத்தியருக்குள் ஒற்றுமை இருந்திருந்தால் —யார் ஆள்வது என்பதில் சண்டை மூண்டிடாதிருந்தால்—வெள்ளையன் இந்த நாட்டை ஆண்டிருக்கவே முடியாது. மராத்தியர் தான் ஆண்டிருப்பார்கள். இந்தியா அடிமையானது யாரால்?

எண்ணிப் பார்த்திட வேண்டும். முஸ்லிம்கள் இந்தியாவின் சுயேச்சையைப் பேணியவர்கள். அடிமைத்தனத்தை அழிப்பது, ஒழிப்பது வெறுப்பதே இஸ்லாத்தின் அடிப்படை!

ஏனைய சமயங்களில் கலை, கலாச்சாரம், நாகரீகம், பண்பாடு ஆகிய அனைத்தையும் விழுங்கி, இருந்தசுவடு தெரியாமல் அழித்து விட்ட இந்திய சனாதனம், இஸ்லாத்தையும் விழுங்கிட அடிநாளிலிருந்தே முயன்று வந்ததும், வெற்றி பெற்றிட

இயலவில்லை. எனவே, ''இஸ்லாம் இந்து மதத்திற்கு விரோதமானது எனப் பொய்ப்பிரச்சாரம் நடத்தி வருகிறது. இஸ்லாமியர், அரபு நாட்டிற்கு இந்தியாவைக் காட்டிக் கொடுத்து விடுவர் எனக் கூறுகிறது. 'இந்துக் கலாச்சாரத்தை, நாகரிகத்தை, பண்பாட்டை, பழக்க வழக்கங்களைக் குழி தோண்டிப் புதைத்து விடும் இஸ்லாம்' என பசப்பிப் பகை மூட்டுகிறது. இதை நான் சொல்வதைவிட மேதை எம்.என். ராய் கூறியிருப்பதைப் பார்த்துக் கொள்வது நல்லது.

''இந்தியாவில் சாக, ஸ்கீதியர், ஹூணர்கள், குஜர், பாத்தியர் முதலிய பல மதங்களையும் அவற்றின் கலாச்சாரங் களையும் சேர்ந்தோர் படிப்படியாக இந்துமதமாக்கப்பட்டு விட்டனர். இஸ்லாம் அப்படி ஆகிவிடவில்லை. (ஆக்கிட வேண்டும் என்பதே இந்து மதத்தார் எண்ணம்)''

''இஸ்லாத்தின் சரித்திரச் சாதனை'' எனும் தனது நூலில்,

எம். என். ராய்.

'எண்ணத்தை எதிலோ வைத்துக் கொண்டு, அதைச் சாதித்திட எது எதையோ சொல்லுகிறார்கள் இஸ்லாத்தைப் பகைப்போர்' என்பதை, எம். என். ராய் கூற்று மெய்ப்பிப்ப தாக உள்ளது. இஃதன்றி உண்மையான இந்து மதத்திற்கு மட்டுமல்ல, வேறு எந்த ஒரு மதத்திற்கும் இஸ்லாம் விரோத மானதல்ல என்பது தெளிவு.

இஸ்லாம் இந்து மதத்திற்கு மட்டிலுமல்ல, வேறு எந்த ஒரு மதத்திற்குமே ஏன், நாத்திகர்கட்கும்கூட எதிரானதன்று. திருக்குர்ஆனைக் கற்றறிந்தோர் இதனை அறிவர். நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பொன்மொழிகளைப் படித்துள் ளோரும் அறிவர். இஸ்லாமிய மக்களின் நடைமுறைகளும் இதனை மெய்ப்பிக்கும். இவற்றிற்கு மேலாக வெள்ளைய ராட்சியும், அவ்வாட்சியைத் தாங்கி நின்ற சுய சிந்தனையற்ற எழுத்தாளர்களும் எழுதிய நூற்களை விட்டு விட்டு இந்திய

நாட்டின் வரலாற்றையும் இந்தியாவின் முஸ்லிம் ஆட்சிக்கால நில வரலாற்றையும் படித்தோர்—அல்லது படிப்போர் காண முடியும். ஒன்றினை இங்கு நினைவு படுத்துகிறேன். அதாவது இஸ்லாமிய அரசு இந்தியாவில் துவக்கமாகிடும் முன்னரே இஸ்லாமிய ஞானிகள் இந்தியாவிற்கு வந்து விட்டனர் என்பதை சாதாரண அறிவு படைத்தோரும் ஒப்புவர். அவர்கள் இங்கே சமயப் பிரச்சாரம் செய்திட வந்தவர்கள் அன்று. அவர்கள் நாட்டிலே ஏற்பட்ட குழம்பங்களின் போது அமைதி கருதி இங்கு வந்தோர் ஆவர். அவர்கள் இங்கு வந்த காலை நாட்டு மக்கள் மட்டுமின்றி நாடாளும் மன்னர் களும் அவர்களை ஆதரித்தனர். அவர்கள் யாரையும் நாடிச் சென்றதாக வரலாறில்லை, அவர்களை நாடித்தான் மக்களும் மன்னர்களும் சென்றுள்ளனர். அவர்களிடம் இருந்த ஒழுக்கத் தன்மை, மனிதப்பண்பு, எளிமை. தூய்மை. இறைநம்பிக்கை, தொழுகை, மறைஓதல் போன்ற சிறப்பியல்புகள் மக்களைக் கவர்ந்தன. எனவே, இங்குள்ளோர்களில் பலர் இஸ்லாமை வலிந்து தழுவிடலாயினர்.

அந்த மெஞ்ஞானிகள் பீடம் அமைந்திருக்கவில்லை. பிரச்சாரத்திற்கென சீடர்களை வைத்திருக்கவில்லை. இஸ்லா மியர் ஆட்சி இங்கு நிலை பெற்ற பின்னரும் கூட இஸ்லாமியப் பிரச்சார அமைப்பு என்பது ஏற்பட்டிருக்கவில்லை. மாறாக இந்து சமய மடங்கள் செயல்பட்டுக் கொண்டிருந்தன. புராணப் பிரசங்கங்கள் கதாகாலட்சேபங்கள், தேர்த்திரு விழாக்கள் போன்ற அனைத்தும் எவ்விதத் தடையுமின்றி நடை பெற்றிடவே செய்தன. இவற்றை எந்த ஒரு முஸ்லிமும் தடை செய்திடவில்லை. இவற்றிக்குச் சான்று எங்கேயும் சென்று தேடிட வேண்டியதில்லை. இங்குள்ள ஆலயங்களும் அவற்றின் நித்திய வழிபாடுகளுமே மெய்ப்பிக்கும். இவ்வாலயங்கட்கும் அவற்றின் வழிபாட்டிற்குமென முஸ்லிம் மன்னர்கள் வழங்கும் மானியங்களும் மெய்ப்பித்திடும்.

இஸ்லாமியராட்சி இங்கு நடந்து கொண்டிருந்த காலத்தே இதர மதங்களின் சமயப் பிரச்சாரம் தடை செய்யப்பட்டிருக்க

எண் 8437
தேதி



வில்லை என்பதற்குச் சான்று பகர்வனவாக நாட்டில் இயங்கிக் கொண்டிருக்கின்ற சங்கரர் மடங்கள், ஜீயர் மடங்கள், சைவச் சமய மடங்கள் போன்றவற்றைக் குறிப்பிடலாம். ஆம், இந்த மடங்களைச் செயலற்றிடும்படி எந்த முஸ்லிம் மன்னனும் செய் திருந்ததாகச் செய்தியில்லை. மாருக மடங்கட்கு மானியம் வழங்கி ஆதரித்ததே வரலாறு! புதிய மடங்கள் தோன்றிட உதவியதே சரிதம். மடலாயத்தில் உள்ள அவர்கள் பூஜிக் கின்ற தங்க விக்ரகங்களை இந்து மன்னர்கள் திருடிச் சென்ற போது அவற்றை மீட்டு உரிய இடத்தில் சேர்ப்பித்ததே இஸ் லாமிய மன்னர்களின் வரலாறு.

ஆய்ந்தறிந்தால், வெள்ளையர் கட்டிய—கட்டிவிடச் செய்த பொய்க் கதைகளைமறந்து சுயச் சிந்தனை கொண்டு நோக்கினுல் பிரகாசமாக இந்த உண்மை துலங்கும்.

காசியில் உள்ள குமரகுருபரர் மடம் ஔரங்கஜேப் மன்னர் வழங்கிய நிலத்தில்--உதவிய பணத்தில் உருவானது என்கின்ற உண்மையை ஞானச் செம்மல், குமர குருபரரின் சரிதம் படித் தோர் அறிவர்.

இது இஸ்லாமியராட்சி தோன்றிய பின்னர் ஏற்பட்ட புதிய மடமன்ருே?

சிருங்கேரி மடத்தில் இருந்த தங்கத்தினுலான பூஜை விக்கிரகத்தை மராத்திய இந்துப் படையினர் கவர்ந்து சென் றதை மீட்டளித்தவர் திப்பு சுல்தான் என்பதை அந்த மடத் தின் வரலாறு பகருமே!

"சிருங்கேரி மடத்திலிருந்த சாரதா தேவியின் பெரிய தங்க விக்கிரத்தைக் கவர்ந்து சென்ற மராட்டியருடன் திப்பு சுல்தான் போராடி, விக்கிரகத்தை மீட்டுவந்து, மடத்தில் ஸ்தாபிப்பதற்கான செலவுகளையெல்லாம் ஏற்றுக்கொண்டு உதவினுன்". -பார்க்க, பாலகிருஷ்ண நாயுடு எழுதிய "டணுயக்கன் கோட்டை" வரலாற்று நவீனம் பக்கம் 534.

சிருங்கேரிமடம் ஜகத்குரு ஸ்ரீசச்சிதானந்த பாரதி ஸ்வாமி யோடு (திப்பு சுல்தான்) கன்னட மொழியில் கடிதப் போக்கு வரத்து வைத்துக் கொண்டிருந்தான். ஜகத்குருவுக்குத் திப்பு சுல்தான் எழுதியுள்ள 21 கடிதங்கள் அச்சாகியுள்ளன.

ஷை நூல் ஷை பக்கம்.

இவை போன்ற ஆயிரமாயிரம் உண்மை வரலாறு உண்டு. இவை அனைத்தும் உணர்த்தும் உண்மை, இஸ்லாமியர் ஆட்சியில், இந்து மதமோ வேறு எந்த மதமோ தங்கள் மத ஆச்சாரப்படி வாழ்வதை, ஆலயங்கள் அமைத்து தாங்கள் விரும்பும் வகையில் வழிபாடு நடத்துவதை, மதப்பிரச்சாரங்கள் புரிவதை எந்த முஸ்லிம் அரசும் தடுத்திடவில்லை என்பதுதான்.

இன்னொன்றையும் இங்கு நோக்குதல் பயனுடையதாகும். இன்று இந்தியாவில் நடைபெறுகின்ற மதச்சார்பற்ற ஆட்சி என்பது இஸ்லாமியப் பேரரசுகள் இங்கு நடந்தக்காலை, மரபு வழியாக இஸ்லாமிய அரசு பின் பற்றிய நெறியேயாகும். அதேபோன்று அன்றிங்கு நிலவிய இந்து மன்னர்கள் அனை வரும் பின்பற்றிய நெறி என்றும்கூட இதைச் சொல்லிட இயலும்.

வெள்ளையராட்சி துவங்கிடும் முன்னர் இந்து மன்னர் கட்கும் இஸ்லாமிய மன்னர்கட்குமிடையேயன்றி, கிராம நகர மக்களிடையே சமயச் சண்டைகள் நடந்ததென்பதாகச் சான்று உண்டா? இருந்தது என்றால் அது வெள்ளையன் கட்டிவிட்ட கதையேயன்றி உண்மையல்லவே.

உண்மையைச் சொல்வதென்றால், இஸ்லாமியம் இங்கு கால் ஊன்றுவதற்கு முன்னம் சைவ—வைணவச் சண்டைகள் உண்டு.

வைதீக மதங்கட்கும் புத்த சமயத்திற்கும் கருத்துப்போர், சமயப் பூசல்கள் உண்டு, உண்டு!

சமணமும் சைவமும் மோதிக்கொண்ட வரலாறு பிரசித்தம்.

வரலாற்றை ஊன்றிப் படித்தால் தெரியும்; இஸ்லாம் இங்கு கால்ஊன்றிய பின்னர் வெள்ளையராட்சி தோன்றிடும்

வரையில் இங்கே சமயச் சண்டைகள் இந்து முஸ்லிம்களிடையே மட்டுமின்றி, இங்கிருந்த வேறு எந்தச் சமயத்தாரிடையேயும் நிகழ்ந்திடவில்லை! இது பொய்யுமன்று, புனைந்துரையுமன்று உண்மை, மெய்மை வாய்மையோடியைந்த சத்தியம் ஆகும். ஆய்க, ஆய்ந்து தெளிந்திடுக!

''வெள்ளைத்துரைமார்களே! நீங்கள் மைசூர் ராச்சியமெல்லாம் திரிந்து ஊர் ஊராக, ஆண் பெண் அனைவரையும் விசாரித்துப் பாருங்கள். ராமராச்சியம் நடத்திய தெய்வீக மன்னன் திப்புசுல்தான்பகதூர் அவர்களுடைய குடும்பத்தார்தான் தொடர்ந்து எங்களை ஆளவேண்டும் என்று ஒருவர் பாக்கி இல்லாமல் எல்லாக் குடிமக்களும் சொல்வார்கள்''...

இது திப்பு சுல்தான் வாரிசுகட்கே அரசுரிமை வழங்குதல் வேண்டுமென பூரணையா எனும் பிராமணர் (திப்புவின் திவான்) வெள்ளையரிடம் செய்த விண்ணப்பம்.

—''பார்க்க, 'டணுய்க்கன் கோட்டை' எனும் வரலாற்று நவீனம் பக்கம்–533

திப்புவின் சவ ஊர்வலம் சென்ற வழி நெடுகிலும் ஆயிரக் கணக்கான மக்கள் திரண்டு நின்று ஆண்களும் பெண்களும் வாய்விட்டு அழுதார்கள். மார்பில் அறைந்து கொண்டார்கள். ஊர்வலத்தின்முன்பு விழுந்து புரண்டார்கள்..."

—'சந்திரநாத்' ஜுலை 1983ல் ஓம்சக்தி எனும்
திங்கள் ஏட்டில் எழுதியுள்ள கட்டுரையிலிருந்து.

மைசூர் ''ராச்சியத்தில் உள்ள எல்லா ஆலயங்களிலும் திப்புசுல்தானின் வெற்றிக்காக விசேஷ பூஜை நடத்தப் பட்டது"

''நூற்றுக்கணக்கான பிராமணர்கள் (திப்புவின் வெற்றிக்காக) ஹோமம் வளர்த்து மந்திரங்களை ஜெபித்துக் கொண்டிருந்தார்கள்."

பார்க்க 'டணுய்க்கன் கோட்டை' வரலாற்று நவீனம் பக்கம்-536.

இத்தகு சிறப்புடைய மன்னன், ராமராச்சியம் நடத்திய வன் என்று இந்துக்கள் வாயாலேயே புகழப்பட்ட திப்புசுல் தானையொப்ப வேறு எந்த இந்து மன்னனாவது புகழப் பட்ட துண்டா? ஆனால் இந்த அரிய மன்னனைப் பற்றி வெள்ளையர்கள் கட்டிவிட்ட கதை என்ன? இந்துக் கோயில்களை இடித்தான், இந்துக்களை வலுக்கட்டாயமாக மதம் மாற்றினான். பிராமணர் களைக் கொன்றான்...

''திப்புசுல்தான் 3000 பிராமணர்களை இஸ்லாத்தில் கட்டாய மத மாற்றம் செய்திட முயற்சித்தபோது அவர்கள் அனைவரும் தற்கொலை செய்து கொண்டார்கள்...''

—மஹா மஹோபாத்யாய டாக்டர் ஹர்பிரசாத் சாஸ்திரி கல்கத்தா பல்கலைக் கழகத்தின் சமஸ்கிருதத் துறைத்தலைவர்.

இந்த விரோதக் கற்பனைக் கதையைப் படித்து ஆச்சரியம் அடைந்ததாக நமது பாராளுமன்றத்தின் உறுப்பினர் திரு. B.N. பாண்டே என்பவர் வியந்து பார்லிமெண்டிலேயே உரை நிகழ்த்தியுள்ளார். மட்டுமின்றி, ''இந்தப் பொய்க்கதை இன்னமும் (1972) உத்திரப்பிரதேசத்தில் உள்ள ஜூனியர் ஹைஸ்கூல் மாணவர்கட்கான பாடநூலில் எழுதப்பட்டிருப்ப தைக் கண்டேன்'' என்றும், ''இதுபோன்ற சமூக தேசவிரோதப் பொய்க்கதைகளைப் பாட நூற்களில் சேர்த்திடலாமா? அதுவும் சுதந்திர நாட்டில் இருக்கலாமா? இது, ஒற்றுமையைச் சிதைக் காதா? பகையை வளர்க்காதா?'' என்றெல்லாம் கேள்விக்கணை (நாடாளுமன்றத்தில்) எழுப்பியுள்ளார்.

திரு டாக்டர் ஹர்பிரசாத் சாஸ்திரியார் கற்ற மாமேதை, பல்கலைக் கழகத்தின் சமஸ்கிருதத் துறையின் தலைவர். அவரே வெள்ளையன் கட்டிவிட்டுள்ள இப்பொய்க்கதையை மெய்யென நம்புகிறார் என்றால், சாதாரண மக்களின் நிலை எவ்வாறிருக்கும். ஆனால் இது போன்ற சமூக விரோத எழுத்துக்களை எழுதுகின்ற

பழக்கம் எந்த ஒரு முஸ்லிமிடமாவது உண்டா? முஸ்லிம்கள் ஆட்சி நடந்த காலத்திலேயேனும் உண்டா?

பிறமதத்தை இழித்தும் பழித்தும் தூஷித்திடல் கூடாது என்பது இஸ்லாமிய நெறி.

மதவிஷயத்தில் கட்டாயம் கூடாது என்பது இஸ்லாமிய மார்க்கத்தின் போதனை-திருக்குர்ஆனின் வாக்கு!

சமயப் பிரச்சாரத்திற்கென இஸ்லாமியர்களிடையே அன்றும் சரி, இன்றும் சரி எந்தவித அமைப்பும் இல்லை.

நெறி கடந்த பேச்சாளரோ, நேர்மைக்குப் புறம்பான எழுத்தாளர்களோ இஸ்லாமியரிடையே இல்லவே இல்லை.

இஸ்லாத்தைத் தாக்கிப் பேசுவோர், எழுதுவோர், வெள்ளையராட்சியில் ஊக்குவிக்கப்பட்டனர். இன்றும் சுதந்திர இந்தியாவிலும் அந்த நிலை தொடர்கின்றது. சாதாரணமாக அல்ல, கன கடூரமாகத் தொடர்கின்றதே.

இஸ்லாமியர்களை வெறுப்போர், பகைப்போர், குறை கூறுவோர் போன்ற யாவருமே தாங்களாகச் சிந்தித்து உண்மை எதுவெனக் கண்டோரன்று. அதனால் தான் அவர்கள் திட்ட வட்டமாகக் காரணம் காட்டி தங்கள் கூற்றிற்கான ஆதாரங்களை முன்வைத்து மொழிவதில்லை. யாரோ சொன்னதை நம்பி எவனோ வேண்டுமென்று இட்டுக் கட்டி எழுதி வைத்ததைப் படித்து விட்டுக் கூறுவதே தொழிலாகக் கொண்டுள்ளனர். இதற்குச் சான்றுவது, கல்கத்தாப் பல்கலைக்கழகத்தின் சமஸ்கிருதத் துறைத் தலைவரான மஹா மஹோபாத்யாய டாக்டர் ஹர்பிரசாத் சாஸ்திரி அவர்கள் எழுதியுள்ள பள்ளிக்கூடப் பாட நூல்.

''3000 பிராமணர்கள், திப்புசுல்தானின் கட்டாய மத மாற்றத்திற்கஞ்சித் தீக்குளித்தனர்'' என இவர் எழுதியிருப்பது கற்பனை; ஆதாரமற்றது; மெய்ப்பிக்க இயலா ஒன்று. ''நான் கேட்டபோது இதற்கான சரியான ஆதாரத்தை

அவரால் தந்திட இயலவில்லை" என்கிருர், தனது பாராளு மன்ற உரையிலே திரு பாண்டே எம். பி.!

ஆதாரமில்லாத ஒன்றை உண்மை என்று நம்பி இவரால் எப்படி எழுதிட முடிந்தது? வெள்ளையன் கட்டிவிட்ட பொய்க் கதையை உண்மை என நம்புகிருர் திரு ஹர்பிரசாத் சாஸ்திரி! காரண காரியம் இன்றியே அவர் இஸ்லாத்தின்பால் பகை கொண்டு விட்டார். பகைமனம் உண்மையை அறிந்திட, இப்படி நடந்திருக்குமா என எண்ணிப் பார்த்திட மறுப்பது இயற்கை தானே?

இப்பொய்க் கதையைப் போன்றதுதான் முஸ்லிம் வேந் தர்கள் கோயில்களை இடித்தார்கள் என்பதும், கோயில்களில் உள்ள தெய்வப் படிவங்களை எடுத்துச் சென்ருர்கள் என்பதும்.

இவை எங்கே நடந்தது? எப்பொழுது நடந்தது? எந்த முஸ்லிம் மன்னன் இப்படி நடத்திஞன்.? என ஆதாரத்துடன் கூறச் சொன்ஞல் கூறிட இயலாது. நிச்சயமாக இயலாது. ஆஞல் இதுவும் சிந்திப்பின்றி, வெள்ளையன் கட்டி விட்ட கதை களை நம்பி, சுயச் சிந்தனை இல்லாத தன்மையில் கூறப்படு வதேயாம். உதாரணமாக—

டில்லியிலே முஸ்லிம் ஆட்சி நடந்தது. ஒரு தலைமுறை யல்ல, பல தலைமுறை நடந்தது. டில்லிக்கு அண்மையில் தானே பஞரஸ் என்கின்ற காசி இருக்கிறது? காசியில் உள்ள விஸ்வநாதர் ஆலயம் எப்பொழுது கட்டப்பட்டது? சிலை எப் பொழுது செய்யப்பட்டது? இரண்டுமே தொன்மையான தென்ருல் பிறகு எந்தக் கோயிலை முஸ்லிம் மன்னர்கள் இடித் தார்கள்? எந்தக் கோயிலில் உள்ள சிலையைத் தூக்கிச் சென்ருர்கள்?

காசி விஸ்வநாதர் ஆலயம் மட்டுமல்ல, காஷ்மீரிலிருந்து கன்னியாகுமரி வரையிலும் எல்லைப்புற மாகாணத்திலிருந்து கிழக்கு வங்கம் முடிய இந்தப்பரந்த இந்தியா முழுவதும் உள்ள கோயில்களும் கோயில்களில் உள்ள சிலைகளும் தொன்மையான

வைதான். இந் நிலப்பரப்பைப் பல பகுப்புக்களாகவும் ஒன்ருகவும் கொண்டு கிட்டதட்ட ஏழுநூருண்டுகள் முஸ்லிம்கள் ஆண்டிருக்கிருர்கள். எனினும் கோயில்கள் கொஞ்சமும் சிதை வின்றியும் கோயில்களில் உள்ள சிலேகள் அப்பழுக்கற்ற தன் மையில் இந்துக்களால் வணங்கப் படும் வகையில் ஆலயத் துள்ளும் இருந்ததே-இருப்பதே வரலாறு.

ஆனல் ''முஸ்லிம் மன்னர்கள் கோயில்களே இடித்தார்கள்; கொள்ளேயிட்டார்கள்; விக்ரகங்களே: உடைத்தார்கள்'' என் கின்ற நம்பிக்கை நாளுக்கு நாள் வெள்ளேயனுல் விரிவடையச் செய்யப்பட்டுள்ளது. வெள்ளேயன் அகன்ற பிறகும் இந்நினே வினே அகற்றி உண்மையைக் காணுகின்ற, கண்டுரைக்கின்ற எண்ணம் மிகுந்திடவில்லே. தேச நலத்தில் அக்கறை கொண்ட, மக்களிடம் ஒற்றுமை நிலவிட வேண்டும் எனப் பேசுகின்ற ஆட்சியாளர்கட்கு இதில் கவனம் செலுத்திட நேரம் இல்லே போலும்!

தமிழ்நாட்டில் ஆற்காட்டில் முஸ்லிம் ஆட்சி நடந்ததுண்டு. ஆற்காட்டிற்கு அண்மையில் தான் சிறப்பு மிகு திருவலம் ஆலயம் உளது. வள்ளிமலே, திருத்தணி, காஞ்சிபுரம் அனேத்துமே ஆற்காட்டிற்கு அருகில்தான் இருக்கின்றன. இவற்றில் எந்தக் கோயில் இடிக்கப்பட்டது? எக்கோயிலில் உள்ள சிலே உடைக்கப்பட்டது? எந்தக் கோயில் ஆற்காட்டு நவாபால் கொள்ளேயிடப்பட்டது? இதைப் போன்று, திருச்சி, மதுரை ஆகிய நகரங்களிலெல்லாம் முஸ்லிம்கள் ஆட்சி நடந்தே உளது. அங்குள்ள ஆலயங்கள் இடிக்கப்பட்டனவா? சிலேகள் உடைக்கப் பட்டனவா?

மதுரை மீனுட்சிக்கும், ஸ்ரீரங்கம் ரெங்கநாதருக்கும் உள்ள கோடிக்கணக்கான புராதனமான வயிர—வைடூரியத் தங்க நகைகளேக் கொள்ளேயிடாமல் எதைப் போய் அங்கு ஆண்ட முஸ்லிம் மன்னர்கள் கொள்ளேயிட்டார்கள்?

வேலூர்க் கோட்டைக் கோயிலிலும் செஞ்சிக் கோட்டைக் கோயில்களிலும் சிலேகள் இல்லே. அங்கே கைடுகள் கூறுவது

''முஸ்லிம் மன்னர்கள் சிலைகளை எடுத்தேகி விட்டார்கள்'' என்பதே!

ஒன்றை நாம் சிந்திக்க வேண்டும். இவ்விரண்டிடங்களிலும் கடைசியாக இருந்தது வெள்ளையர்கள் ஆட்சிதான். அவர்கள்தான் அழகிய சிலைகளைத் தங்கள் நாட்டிற்கு எடுத்துச் செல்வதில் ஆர்வம் உள்ளவர்கள். எனவே ஏன் அவர்கள் எடுத்தேகி இருக்கக் கூடாது? எடுத்தேகிவிட்டு முஸ்லிம்கள் மீது பழி போட்டிருக்கக் கூடாது? அல்லவென்றால், முஸ்லிம் மன்னர்கள் உடைத்தார்கள் என்பதற்கு என்ன ஆதாரம்?

மதுரையை ஆண்ட யூசுப்கானுக்கும் (கான் சாகிபுக்கும்) ஆற்காடு நவாபு முகம்மதலிக்கும் மதுரையில் போர் நடந்தது. முகம்மதலியின் படையினர் ஓர் இரவில் மதுரைக் கோட்டையின் கொத்தளத்தை இடித்து விட்டனர். அதுபோது யூசுப்கான் அரண்மனையில் துயில் கொண்டிருந்தான். மதுரை மீனாட்சி அம்மை பார்ப்பனச் சிறுமி வடிவிலே யூசுப்கான் முன் தோன்றி, ''எதிரிகளால் கோட்டை இடிக்கப்படுகிறது; தூங்கிக் கொண்டிருக்கிறாயே? எழுந்திரு! எழுந்துசென்று கோட்டையைக் காப்பாற்று'' எனக்கூறி எழுந்து செல்லப் பணித்ததாக ''கான்சாயபு சண்டை'' என்கின்ற நூலில் காணப்படுகிறதே! இவர்கள் கூறுவது போன்று கான்சாகிப் கோயில்களை இடித்துச் சிலைகளை உடைத்துக் கோயில் சொத்துக்களைக் கொள்ளையிடுகின்ற வர்க்கத்தினன் ஆனால் அவனுக்கு எப்படி மதுரை மீனாட்சி உதவியிருக்க இயலும்?

உண்மை என்னவென்றால், முஸ்லிம்களின் ஆட்சி இங்கு தோன்றுவதற்கு முன்னர் இங்கு ஆண்ட இந்து மன்னர்களால் போர்க்காலங்களில் கோயில் மதில்கள் இடிக்கப்பட்டிருக்கின்றன. காரணம் அவை அரண்களாகப் பயன்பட்டதால்! கோயில் சொத்துக்கள் கொள்ளையிடப்பட்டன, போர்ச் செலவிற்குத் தேவைப்பட்டதால்! சிலைகள் தகர்க்கப்பட்டன. தூக்கி எறியப்பட்டன மதக்காழ்ப்பால்! இவற்றிற்கு ஆதாரம் இந்து மதத்தைச் சார்ந்த வரலாற்றாசிரியர்களே தமது நூல்களில் தந்திருக்கக் காணலாம்,

உதாரணமாக, மயிலை சீனி வேங்கடசாமி அவர்கள் எழுதியுள்ள புத்த-சமண வரலாற்று நூற்களைப் படித்தால் தெரியும். மற்றும் ஆனந்தரங்கம் பிள்ளையின் நாட்குறிப்புகளைப் புரட்டினுல் காணலாம். வரலாற்று மேதை பன்மொழிப் புலவர் கா. அப்பாதுரை அவர்கள் எழுதியுள்ள 'தென்னுட்டுப் போர்க் களங்கள்' எனும் அரிய நூலினைப் பார்த்தால் அறியலாம். சிலைகட்கு சக்தி இருப்பதாக முஸ்லிம்கள் நம்புவதில்லை. ஆனுல் திருடிவந்த சிலைக்கு அதிக சக்தி உண்டு என நம்புவதும் இரவோடிரவாக அடுத்தவன் கோயிலில் உள்ள சிலையைத் திருடிவந்துவிடுவதும் இந்து வைதிகர்களிடையே இன்றும்கூட உண்டு.

நாகையில் இருந்த புத்தவிகாரில் உள்ள தங்கத்தினுலான புத்தர் சிலையை எடுத்து வந்து பெருமாள் கோயில் கட்டியது யார்?

சிதம்பரத்தில் உள்ள சிலையைக் கடலில் தூக்கி எறிந்தது எந்த மன்னன்?

உடையவர் எனச் சிறப்பித்துக் கூறப்படும் வைணவப் பெரியாரான ராமானுஜாச்சாரியார் அவர்களை தமிழ் நாட்டை விட்டே வெளியேறிடச் செய்தது யார்?

கூரத்தாழ்வான் சைவரல்ல என்பதற்காக அவர் தம் கண்களைத் தோண்டிட உத்தரவிட்டது யார்?

சமணர்களைக் கழுவிலேற்றியது யார்?

இது போன்ற நிகழ்வுகள் நடந்திடாது காத்ததே இங்கு நிலைத்து நடந்த இஸ்லாமிய அரசுகள்தாம்!

இவற்றை விரிக்கிற் பெருகும். இவை போன்ற சிலை திருட்டுக்களும், கோயில் அழிப்புக்களும். கோயில் கொள்ளை அடிப்புகளும் முஸ்லிம்களின் ஆட்சியில் தடுக்கப்பட்டன. அவர்கள் காலத்திலும் இது நடந்ததென்ருல் அது மத்தியில் உள்ள இஸ்லாமியப் பேரரசின் பலம் குன்றியக்கால் மராட்டியத்தில் தோன்றிய பலாத்காரமும் படுகொலையும் ஆளுகின்ற வெறியும் பிடித்த பான்ஸ்லேக்களின் காலத்தில்தான்!

இவர்கள் பதினெட்டாம் நூற்றுண்டின் மத்தியபகுதியில் திருவண்ணுமலை ஆலயத்தை பாதுகாப்புக் கேந்திரமாகக் கொண்டு சிதம்பரம்தொட்டு சதுரங்கபட்டினம் வரையிலும் மேற்கே கள்ளக்குறிச்சி முதல் வடக்கில் நெடுகிலுமாக நடத்தியுள்ள கொள்ளை, கொலை, கற்பழிப்பு, கோயில் அழிப்பு, சிலை எடுப்பு...இத்யாதிகளை அக்காலச் சரித்திர நுகர்வால் ஓரளவிற்குக் காண இயலும். விரிவாக ஆனந்தரங்கம்பிள்ளையின் நாட்குறிப்பு அறிவிக்கும்.

இந்த நாட்குறிப்புக்களை அச்சிடுவதை அண்மையில் நிறுத்திவிட்டார்கள். சென்னைக் காப்பகத்தில் சென்று காண வியலும்! அச்சிட்டதை நிறுத்தியதற்குக் காரணம் உண்மையை மக்கள் அறிந்திடக் கூடாதென்கின்ற காரணத்தாலிருக்கலாம். இக்காரணத்தாலேயே எம். என். ராய் எழுதிய ''இஸ்லாமியச் சரித்திரச் சாதனை'' எனும் நூல் வெளிவருவது தடுக்கப்பட்டிருக்கிறது எனலாம். வீர சவர்க்காரின் எரிமலை நூல் பரவுவது நிறுத்தப்படுகிறதும் இதே காரணத்தால்தான் போலும்! இன்னும் எத்தனையோ?

அன்றும் சரி, இன்றும் சரி, கோயில்களில் கொள்ளை அடிப்பவர்கள், சிலையைத் திருடிச் சென்று விற்று வாழ்பவர்கள் முஸ்லிம்கள் அல்ல. தனி ஒரு முஸ்லிம்கூட இத்தொழிலில் ஈடுபட்டதாக இதுவரை செய்தி இல்லை என்பது நிதர்சனமாகத் தெரிந்திருந்தும் முஸ்லிம்களின் மீது பழி சுமத்துபவர்களை என்னென்பது?

''குறிப்பாக இஸ்லாத்தின் பேரில் வரலாற்றறிஞர் பலருக்குள்ள தப்பெண்ணத்துக்கு ''இரு வரலாற்றுக் கூறுகளே காரணம். ஒன்று அவர்கள் ஒரு கையில் வாளும் ஒரு கையில் குரானும் கொண்டு சமயத்துடன் அரசியலும், அரசியலுடன் சமயமும் இணைத்தனர் என்ற கருத்து. மற்றது இந்திய மாநிலத்தில் சைவ வைணவக் கோயில்களை அவர்கள் கொள்ளையிட்டனர்' 'என்பது.

உண்மையில் தம் அரசியல் வெற்றிக்குத் தெய்வீகத் தோற்றந் தர விழைந்த எல்லா அரசர்களும், பேரரசர்களும் இதைச் செய்யத் தவறவில்லை. கிறிஸ்தவ, சைவ, வைணவ வரலாறுகள் இதனைக் காட்டும்.

மதமாற்றும் செயலில் பல்லவன் மகேந்திரவர்மன் தென்னார்க்காட்டுப் பாடலி நகரிலுள்ள சமணப் பள்ளியை அழித்ததையும், கிருமி கண்ட சோழன் தில்லைப் பெருமாளைக் கடலில் எறிந்ததையும், மேலை உலகில் ஆங்கில மன்னன் எட்டாம் ஹென்றி கத்தோலிக்க மடங்களை அழித்ததையும் பெர்டினந்து—இசபெல்லா அரச தம்பதி ஸ்பெயினில் இஸ்லாமிய நாகரிகத்தை அழித்ததையும் வரலாறு பதிவு செய்துள்ளது. தவிர சைவ வைணவக் கோயில்களை அவ்வச் சமயத்தவரே கொள்ளையிடத் தவறியதில்லை.

காஞ்சியை விசய நகரப் பேரரசர் காலத்தில் பாமினிப் பேரரசன் மட்டுமின்றி ஒரிசாவை ஆண்ட கசபதி மன்னரும் கொள்ளையிட்டனர். மராட்டியர் கொள்ளைக்களான கோயில்கள் பல. மராட்டிய இனத்தவரல்லாதவர் பிராமணராய் இருந்தால்கூட அவர்களை (மராட்டியர்) அழிக்கத் தயங்கவில்லை என்று காண்கிறோம். மற்றும், பல்லவரும் சோழரும் எதிரி நாட்டுச் செல்வத்துடன் செல்வமாகக் கோயில்களையும் கொள்ளையிட்டு தம் நாட்டு மக்களிடையே அதையே வெற்றிச் சின்னமாக காட்டும்படி சிலைகளைக் கொண்டு வந்தனர் என்பதையும் நாம் மறக்க முடியாது..''

கூறுபவர் :- பன்மொழிப் புலவர் கா. அப்பாதுரை M. A., L. T. நூல் : தென்னாட்டுப் போர்க்களங்கள் பக்கம் 299

கோயில்களை முஸ்லீம் மன்னர்கள் கொள்ளையிட்டார்கள் என்கின்ற கூற்றிற்கு நாமறிந்தவரை 'கஸ்னவி (கஜ்னி) முகம்மது சோமநாதபுரத்தைக் கொள்ளையிட்டார்' என்பதைத்

தவிர்த்துச் சான்றுடன் தக்க வகையில் மெய்ப்பித்திடக்கூடிய தாக எது ஒன்றும் இருப்பதாகத் தெரியவில்லே.

'சோமநாதபுரம் கோயிலேயும் வரம மார்க்கத்தினர் (சக்தி வணக்கத்தினர்) கஜ்னி முகம்மதை அழைத்து வந்து கொள்ளே யிட வைத்தனர்' என முனேவர் கே. எம். முன்ஷிதமது 'ஜெய் சோமநாத்' எனும் நூலில் கூறியுள்ளார். முஸ்லிம் மன்னர்கள் அச்செயலில் ஈடுபட்டனர் என விவாதத்திற்காக ஒப்புக் கொண்டாலும்கூட, 'சைவ—வைணவச் சமயங்களேச் சார்ந்த மன்னர்களும் அச்செயலே முஸ்லிம் மன்னர்கட்கு முன்னரே செய்துள்ளனர்' எனப் பன்மொழிப் புலவர் கா. அப்பாதுரை M. A ,L. T. அவர்கள் கூறுவதை மேலே கண்டோம். அது மட்டுமின்றி 'உலகம் தழுவியதாக இது, அங்கிங்கெனுதபடி எங்கும் நடந்திருக்கிறது. கிருஸ்தவ மன்னர் முதல் ஏனேயோ ரும் செய்திருக்கின்றனர்' எனச் சான்றுடன் பகர்கின்ருர் பன் மொழிப் புலவர். அவற்றில் இன்னென்று 'சைவ வைண வர்கள் தம்தம் சமயம் சார்ந்த கோயில்களேயே கொள்ளேயிட் டுள்ளனர்' என்பது.

கா. அப்பாதுரையார் தரும் தகவல் மட்டுமின்றி மயிலே சீனிவெங்கடசாமி அவர்கள் தந்துள்ள வரலாற்றுச் செய்தி களேப் படிக்கின் இரத்தம் உறைந்துவிடும். ஆம் அவர் கூறுவதைப் பாருங்கள்.

''சமணக் கோயில்களேயும் பௌத்தக் கோயில்களேயும் வைணவர் கைப்பற்றும்போது முதலில் நரசிங்க மூர்த்தியை அமைப்பது வழக்கம்.''

கூறுபவர் :- மயிலே சீனிவெங்கடசாமி
நூல் : சமணமும் தமிழும்—பக்கம் - 204

காஞ்சியில் பண்டைக் காலத்திலிருந்த பௌத்த சமண கோயில்கள் சைவ வைணவ கோயில்களாக மாற்றப்பட்டன.

மேற்படி நூல்—பக்கம்-199.

புத்தர் கோயில்கள் பல பிற்காலத்தில் விநாயகர் (பிள்ளையார்) கோயில்களாக மாற்றப்பட்டன.

—மயிலை சீனி வேங்கடசாமி
—பௌத்தமும் தமிழும்—45

காஞ்சிக் காமாட்சியம்மன் ஆலயம் பௌத்தரின் தாரா தேவியம்மன் கோயில் என்று ஆராய்ச்சியாளர் கூறுவர்.

ஷை நூல்—பக்கம்—78.

காஞ்சிபுரத்தில் உள்ள கச்சீஸ்வரர் கோயில் என்று வழங்கும் ஆலயம் பூர்வத்தில் புத்தர் கோயில் எனத் தெரிகிறது.

ஷை நூல்—58.

காஞ்சிபுரம் புத்தேரித் தெருவின் மேற்குக் கோடியில் உள்ள கைலாசநாதர் கோயில் ஆதியில் புத்தர் கோயிலாக இருந்திருக்க வேண்டும். ஷை நூல்—59.

திருச் சாணத்துமலை, இது திருவாங்கூர் நாட்டில் உளது. இங்கு இப்போதுள்ள பகவதி கோயில்முற்காலத்தில் ஜைனக் கோயிலாகவும் அதற்கு முன்பு பௌத்தக் கோயிலாகவும் இருந்தது. ஷை நூல்—73.

தருமராஜர் எனும் பெயருள்ள புத்தர் கோயில்கள் பிற்காலத்தில் பாண்டவரைச் சேர்ந்த தருமராஜா கோயில்கள் ஆக்கப்பட்டன. ஷை— நூல்—178.

மணிமேகலை, சம்பாதி. தாராதேவி முதலிய சிறு தெய்வங்கள் பண்டைக் காலத்தில் பௌத்தர்களால் வணங்கப்பட்டு வந்தன. இந்தத் தெய்வங்களின் கோயில்களை இந்துக்கள் பிற்காலத்தில் கைப்பற்றிக் கொண்டு இவைகளுக்கு காளி, பிடாரி, திரௌபதையம்மன் எனப் புதுப்பெயர்கள் சூட்டிக் கிராமதேவதைகளாக்கி விட்டனர்.

''திருமங்கை ஆழ்வார் நாகப்பட்டினத்துப் பௌத்த ஆலயத்திலிருந்த பொன்னாலமைந்த புத்தர் சிலையைக்

கவர்ந்து சென்று அந்தப் பொன்னைக் கொண்டு திருவரங்கத்தில் திருப்பணி செய்தார்''

ஷை நூல்—37.

மயிலை சீனிவேங்கடசாமி இந்து சமயம் சார்ந்தவர் என்பதை நாடறியும்; அவர் தம் பெயரும் அறிவிக்கும். அவர் எழுதியுள்ள 'சமணமும் தமிழும்', 'பௌத்தமும் தமிழும்' என்கின்ற நூற்களை திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்தக் கழகந்தான் வெளியிட்டுள்ளது. ஒரு பதிப்பல்ல, பலபதிப்புக்கள். அவற்றைப் படிப்போர் புத்த-சமண சமயங்களைக் 'கபளீகரம்' செய்து விட்ட சைவ-வைணவம் உள்ளிட்ட இந்துமதத்தின் மீது காழ்ப்புறுவதில்லை. மாருக ஆராய்ச்சியெனச் சுட்டி அமைகின்றனர். இந்தப் பண்பு வரவேற்க வேண்டியதுதான். ஆனால் முஸ்லிம்களைப் பற்றிய செய்திகளை ஆராய்ச்சியாக மதிப்பதில்லை. சமயப்பகை வளர்க்கும் கருவியாகவே கொள்கின்றனர். இது ஏன்...?ஏன்?...

ஒன்று நாம் கருத்தில் கொள்ள வேண்டியுள்ளது. புத்த சமய அரசும், ஜைன சமய அரசும் அகன்ற உடன் அம்மதத்தினரை பெருமளவில் தங்கள் சமயத்தவராக ஆக்கி விட இந்து சமயத்தினரால் முடிந்துளது. அஃதேபோன்று அவர்கள் ஆலயங்களைத் தங்கள் கோயில்களாக ஆக்கிக் கொள்ளவும் முடிந்துள்ளது. ஆனல்... ஆனல்...

இந்தியாவில் இஸ்லாமியராட்சி அகன்ற பின்பும் என்னதான் முயன்றும் இஸ்லாமியர்களை இந்துக்களாக ஆக்கிவிட முடியவில்லை. இஸ்லாமியர்களின் பள்ளிகளைத் தகர்த்தெறிந்திட ஆகிவிடவில்லை. இந்தக் கோபந்தான் இந்துப்பொது மக்களை இஸ்லாத்தின்மீது முஸ்லிம்களின் மீது பகைகொள்ளுமாறு தூண்டிவிடும் முயற்சியில் சர்வ சமயக் காப்பாளர்களாகத் திகழ வேண்டிய இந்து சமயப் பெரியவர்களைக் கூட ஈடுபட வைக்கிறதெனலாம். இது தவிர்த்து இஸ்லாம் இந்து சமயத்திற்குப் பகையானதன்று என்பதை அவர்களே அறிவார்கள்-

# சீறாப் புராணம்

# விலாதத்துக் காண்டம்

**மூலமும் உரையும்**

நான்கு பாகங்களாகத்
தயாராகிக் கொண்டிருக்கிறது.
ஒவ்வொரு பாகமும் விலை ரூ. 25—00

—□—

விற்பனையாகிக் கொண்டிருக்கிறது

# நுபுவ்வத்துக் காண்டம்

**மூலமும் உரையும்**

| | | |
|---|---|---|
| முதற்பாகம் | விலை ரூ. | 25 00 |
| இரண்டாம் பாகம் | ,, | 20—00 |
| மூன்றாம் பாகம் | ,, | 25—00 |
| நான்காம் பாகம் | ,, | 25—00 |

நான்கு பாகங்களும் ஒருசேர வாங்குவோருக்குத்
தபால் கட்டணம் இன்றி அனுப்பப்படும்.


## சீதக்காதி நூல் வெளியீட்டகம்

21, பச்சையப்பச் செட்டித் தெரு,
சென்னை-600 002.

Wrapper Printed at : Threeyem Printers, Madras-1.